# மித்ரா டைம்ஸ்

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்

**MITRA TIMES - Tamil & English Monthly**


மலர்: XI இதழ்: 5 | நவம்பர் 2024 | ஆண்டு சந்தா ரூ.240/- | விலை ரூ.20/-

Vol.: XI Issue: 5 | November 2024 | Annual Subscription Rs.240/- | Price Rs. 20




குஜராத்தில் 500 தீர்ப்புகளை வழங்கிய போலி நீதிமன்றம்!

தோப்புக்கரணம் போடுவது உடல் நலத்துக்கு நல்லது!

குடும்பம்! கொடு இன்பம்!
- ஆசிரியர் கடிதம்


குடல் புழுக்களை நீக்கும் இயற்கை உணவுகள்!

திட்டமிட்டால் வெற்றி பெறலாம்!

## வி. சாலையில் நடந்த விஜய் அரசியல் மாநாடு!
## - தடம் மாறுகிறதா தமிழக அரசியல் களம்!

# RATAN TATA –
# BENCH MARK OF INDUSTRIALIST!

Ratan Naval Tata, born on December 28, 1937, was one of India's most respected business leaders. He played a pivotal role in transforming Tata Group into a global conglomerate, expanding its influence across sectors like automotive, steel, technology, and hospitality. Under his leadership, Tata Group made landmark acquisitions, including Jaguar Land Rover and Corus Steel, cementing its position on the global stage.



Ratan Tata's legacy is not only marked by his business achievements but also by his ethical leadership and social responsibility. Through his visionary leadership and unwavering commitment to social causes, he will continue to inspire future generations to lead with integrity and compassion.



After completing his education, he joined the Tata Group in 1961. His early roles involved working in various Tata companies, gaining valuable experience in different sectors. Later he succeeded J.R.D. Tata as chairman of Tata Sons upon the latter's retirement in 1991. At the time, the Indian economy was undergoing significant liberalization, presenting both opportunities and challenges for Indian businesses. Under Ratan Tata's leadership, the Tata Group seized these opportunities and embarked on a period of rapid growth and diversification. In his lifetime he received two of India's highest civilian honors—the Padma Vibhushan (2008) and the Padma Bhushan (2000).

"Ratan Tata passed away on October 9, 2024, after being briefly hospitalized for age-related ailments."

Best Quotes of Ratan Tata for Students Here are the best motivational quotes of Ratan Tata for Students and Education: "Youngsters have the courage and also the understanding to react to the needs of the times – they are not bound by the traditions of the past." "Don't be a spectator, don't let life pass you by."

"I would say that one of the things I wish people understood better is that a large corporation and a young student have something in common: they both have to have a sense of purpose in what they're doing." "Your most unhappy customers are your greatest source of learning." "I've always had a fascination for cars and would love to build an affordable car that every Indian would be proud to own." "What I would like to do is to leave behind a sustainable entity of a set of companies that operate in an exemplary manner in terms of ethics, and values, and continue what our ancestors left behind."

I may have hurt some people along the way, but I would like to be seen as somebody who has done his best to do the right thing for any situation and not compromised." "The day I am not able to fly will be a sad day for me."

"Empowerment of individuals is a key part of what makes open source work since individuals can make decisions and drive things forward." "In our journey of life, we pass pleasures and pain. There will be sunshine and rain; there will be loss and gain. But we must learn to smile again and again." Best Quotes of Ratan Tata on Success Here are the best motivational quotes of Ratan Tata on Success and failure: "I don't believe in making the right decisions.



Concept by:
**S.SHRUTHI LAKSHMI**
B.Sc., (psychology)

I take decisions and then make them right." "If you want to walk fast, walk alone. But if you want to walk far, walk together." "Ups and downs in life are very important to keep us going because a straight line even in an ECG means we are not alive." "Take the stones people throw at you, and use them to build a monument." "None can destroy iron, but its rust can. Likewise, none can destroy a person, but his mindset can." At last, we loss not only an industrialist but also a motivationalist.

ஆசிரியர் கடிதம்

# குடும்பம்! கொடு இன்பம்!

**அ**ன்புடையீர் வணக்கம்!

அனைவரும் தீபாவளி திருநாளை மகிழ்ச்சியுடன் குடும்பத்துடன் கொண்டாடி இருப்பீர்கள் என்று நம்புகிறேன். ஒவ்வொரு ஆண்டும் எல்லா குடும்பத்திலும் தீபாவளி அன்று தலையில் எண்ணெய் தேய்த்து குளித்து புத்தாடை அணிந்து பட்டாசு வெடித்து கொண்டாடுவது குடும்பங்களின் வழக்கம்.

வழக்கத்துக்கு மாறாக பட்டாசு கடைகள் இந்த முறை கூட்டம் இல்லாமல் வியாபாரம் சரியாக நடக்கவில்லை என்று நண்பர்கள் வட்டாரத்தில் தெரிய வருகிறது. அதற்குக் காரணம் கடைகளில் போய் பட்டாசு வாங்க போனவர்கள் இப்போது ஒவ்வொரு குடும்பத்திலும் தீபாவளி பண்ட் என்ற பெயரில் சீட்டு போட்டு அதன் மூலமாக பட்டாசு பாக்கெட் பெற்று வருகிறார்கள். இதனால் கடைகளில் கூட்டம் குறைந்து போய் இருக்கும் என்று குறிப்பிடப்படுகிறது. கடையில் பட்டாசு விற்பனை குறைந்தாலும் ஒவ்வொரு குடும்பமும் கொண்டாடும் மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை.

குடும்பம் என்கிற அமைப்பு கொஞ்சம் குறைபாடுகளும், அதிக நன்மைகளும் வாய்ந்தது என்பது சமூகவியல் துறையில் ஆழம் கண்டவர்களின் கணிப்பு குடும்பங்களில் மகிழ்ச்சியைத் தருவதற்கு அடிப்படை சில இருக்கின்றன.




எதிர்பார்ப்புகள் வேறு; எதார்த்தங்கள் வேறு; இரு வேறு விசயங்களை ஒரே தட்டில் வைத்து எடை போடுவது நமது தவறு.

பேசும்போது அறிந்தவற்றையே திரும்பக் கூறுகிறோம். ஆனால், கேட்கும்போதோ புதிதாக ஒன்றை அறிய வாய்ப்பிருக்கிறது. எனவே, குறைவாகப் பேசி, நிறைய கேட்போம்.

தண்ணீர் கீழ் நோக்கிப் பாய்வதால் தாழ்ந்ததும் இல்லை. நெருப்பு மேல்நோக்கி எரிவதால் உயர்ந்ததும் இல்லை. இயல்புகள் வெவ்வேறு.

குடும்பத்தில் இருப்பவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு குணம் உண்டு.

உலகப்புகழ்பெற்ற ஒரு சிறுகதை.

கணவனிடம் 'வாட்ச்' இருந்தது. அதற்கு தங்கத்தில் செயின் வாங்க கணவனுக்கு ஆசை. ஆனால், பணமில்லை. அவன் மனைவிக்கு மிக அழகான கூந்தல். அதை முடித்து வைக்க, 'தங்க கிளிப்' வாங்க ஆசை. ஆனால், வசதியில்லை.

முதல் திருமண ஆண்டுவிழாவில், இந்த வாட்சை வைத்து என்ன செய்ய என்று விற்று விட்டு, மனைவி கூந்தலுக்கு தங்க கிளிப் வாங்கி வந்தான் கணவன்.

ஆனால், தன் அழகான கூந்தலை வெட்டி, விற்று விட்டு கணவன் வாட்சுக்கு

செயின் வாங்கி வந்திருந்தாள் மனைவி. ஒருவருக்காக மற்றவர், கஷ்டப்பட தயாராகும்போது அங்கு அன்பு வலுவடைகிறது. நம்மை கஷ்டப்படுத்தியவர்கள் யாரையும் நமக்கு பிடிப்பதில்லை. நமக்காக கஷ்டப்பட்ட யாரையும் நாம் வெறுப்பதில்லை.

கணவன் மனைவிக் கிடையிலான உறவு சுமுகமாக இருக்க வேண்டும். பெற்றோர் பிள்ளைகளுக் கிடையிலான பாசம் பலமாக இருக்க வேண்டும். பிள்ளைகள் தமக்கிடையே ஒருமித்த உணர்வுடன் இருக்க வேண்டும்.

இதையே நாம் இனிய உறவுகள் என்போம். குடும்பம் என்பது ஒரு தனிச்சொல்லாயினும் அதைப் பிரித்துப் பார்க்கும்போது அதில் "கொடு இன்பம்" என்கின்ற தொனி ஒலிக்கிறது. எனவே, இன்பத்திற்குப் பஞ்சமில்லாத உறவுகளின் சங்கமமே குடும்பம் எனப்படும்.

குடும்பம் அனைவருக்கும் நிழல் தரும் ஆலமரம் மட்டுமன்று. ஆண்டாண்டு காலமாய் நீண்ட மரபுகளைத் தாங்கும் காலமரமும் கூட.

நிம்மதி என்பது இருப்பதில் திருப்தி படுவது தானே தவிர, இல்லாததிலும் இழந்ததிலும் தேடுவதல்ல.

அறிவுரை இலவசமாக கிடைத்தாலும் அனுபவம் பட்டால்தான் புரியும்.

எனவே குடும்பம் மகிழ்ச்சியாக இருக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அமைதிக்கான வழி நம்மிடமே உள்ளது!

- எம்.எஸ்.மூர்த்தி

# உள்ளே...




7 வி. சாலையில் நடந்த விஜய் அரசியல் மாநாடு! – தடம் மாறுகிறதா தமிழக அரசியல் களம்!



11 ரத்தன் டாடாவின் வழியை பின்பற்றி மக்கள் நலப்பணிக்காக 20ஆயிரம் கோடி வழங்கிய தொழில் அதிபர்!



23 தெரியாதவர்களிடமிருந்து பணம் வருகிறதா? கவனமாக இருங்க!



29 வெற்றி மீது எப்போதும் ஆசை கொள்ளுங்கள்!



41 மற்றவர்களோடு ஒப்பிடாதீர்கள்!



50 விதை இருளுக்கு அஞ்சாது




# சாதாரண குடும்பத்தில் பிறந்து சாதனை படைத்த 'யோகா' தனலட்சுமி!



பெண்களை அதிகம் படிக்க வைக்காத சூழல் இருந்த காலம் அது. படிக்க வசதி இல்லை என்பது ஒரு புறம் இருந்தாலும் பெண்கள் படிக்க வேண்டிய அவசியம் இல்லை .அவர்கள் திருமணம் செய்து கொண்டு வேறொரு வீட்டுக்கு வாழ போகிறவர்கள் என்கிற எண்ணம் பெண்கள் பிறந்த குடும்பங்களில் இருக்கும்போது திருமணமாகி இன்னொருவர் வீட்டுக்கு போகிறபோது அங்கு தொடர்படிப்பு கனவாகவே ஆகிவிடுகிறது. கணவர், குழந்தைகள் என்ற சூழ்நிலையில் வீட்டுக்குள்ளே தங்களுக்கான தளத்தை சுருக்கி கொண்டார்கள்.

ஆனால் ஒரு பெண்மணி எல்லோரையும் போல் திருமணம் செய்து கொண்டு சாதாரணமாக வாழ வந்து இரண்டு குழந்தைகளுக்கு தாயாக குடும்பத்தில் தனது கடமையை சரியாக நிறைவேற்றி அதே நேரத்தில் தான் கண்ட கனவை நினைவாக்கும் உதவாக்க நன்கு படித்து இன்றைக்கு ஆயிரக்கணக்கான ஆண் ,பெண் இருவருக்கும் யோகா சொல்லிக் கொடுக்கும் அளவுக்கு வளர்ந்திருப்பவர் தனலட்சுமி எப்படி இந்த நிலைக்கு வந்தார் என்பதை அவரே சொல்கிறார்.

என்னை பற்றி சொந்த ஊர் திண்டுக்கலாக இருந்தாலும் தந்தையின் தொழில் காரணமாக பெங்களூரில் வசித்தோம் நான் அங்கே தான் பிறந்தேன் சிறுவயது முதல் நன்றாக படிக்க கூடிய பெண்ணாக இருந்தேன், படிப்பை தாண்டி தமிழ் புத்தகங்களை என் தந்தை நிறைய வாங்கி தந்து அறிவை வளர்த்தார். பின் நாளில் பொருளாதார சிக்கல் காரணமாக மீண்டும் திண்டுக்கல் குடிபெயர்ந்தோம் குடும்ப சூழல் காரணமாக மேற்கொண்டு கல்வியை தொடர முடியவில்லை...



இளம்வயதிலேயே வறுமையின் காரணமாக வேலைக்கு சென்றேன். திருமணமும் முடித்து வைத்தார்கள் இரு குழந்தைகள் இருக்கிறார்கள் கணவருக்கு வேலை காரணமாக சிவகங்கையில் 14 வருடத்திற்கு முன் குடிபெயர்ந்தோம்.

ஆனால் கல்வி கற்க வேண்டும் என்ற ஆவல் இருந்து கொண்டே இருந்தது கணவரிடம் கல்வி கற்க வேண்டுமென சொன்னபோது குழந்தைகளை பார்த்து கொண்டு வீட்டு வேலையும் பார்த்து கொண்டு உன்னால்

# மித்ரா டைம்ஸ்

மித்ரா - 11 நவம்பர் 2024 டைம்ஸ்- 5

தலைவர் / நிர்வாக இயக்குனர்
**எம்.எஸ். மூர்த்தி**

துணை தலைவர் /இணை இயக்குனர்
**திருமதி சுஜாதா மூர்த்தி**

நிர்வாக சிறப்பு ஆலோசகர்
**கலைமாமணி நடிகர் பூ.விலங்கு மோகன்**

தலைமை செய்தி ஆசிரியர்
**மணவூர்.கி.விடாரண்யம்**

தலைமை நிர்வாக ஆசிரியர்கள்
DR. **ஆ.தமிழ்மாறன்** எம்.ஏ.எம்.பில்
9789016153
DR.**ப.குணசீலன்** எம்.பி.ஏ.,
9962531325

நிர்வாக ஆசிரியர்
**ஆர்.குணசேகரன்**

செய்தியாளர்கள்
**பி.வினோத், வெ.சுரேஷ்**

செய்தி இணை ஆசிரியர்கள்
**துடுப்பதி ரகுநாதன்**
**கவிஞர் பண்ருட்டி சுசந்தினா**
**கோவை.பி.முத்துராஜ்**
**சென்னை எம்.ஜி.ரவீந்திரன்**

இணையதள செய்தியாளர்
**ஆர்.கோபிநாத்**

சட்ட ஆலோசகர்
**வி.என்.பிரசாத்** எம்.ஏ.எம்.பில்

வடிவமைப்பு
vidapublications@gmail.com

விளம்பரம் சந்தா தொடர்புக்கு
**சி.இளவரசி** - 044 23743007 /08

**அலுவலகம்:**
**001, இன்ஞ்சக்கல் பிளாக், சித்ரா அவென்யூ,**
**9, சூளைமேடு ஹைரோடு, சென்னை - 94.**
**தொடர்பு: 044-2374 4661, 23743 007/8**

6374285644
mitratimes2015@gmail.com
www.mitratimes.com






படிக்க இயலுமா என்றார் ஆனால் நான் தன்னம்பிக்கையுடன் என்னால் முடியும் என்றேன் பல வேலைபளுகளுக்கிடையே கல்வி தொடர்ந்தேன்.

திருமணத்திற்கு பின் இரு குழந்தைகள் பிறந்த பின் தன்னம்பிக்கையுடனும் தைரியத்துடனும் யோகா பட்டபடிப்பும், யோக சிகிச்சை, இயற்கை மருத்துவத்தில் பட்டயபடிப்பும், யோகா நடைத்தையியல் சிகிச்சையில் முதல் மதிபெண்ணுடன் பட்டயகல்வியை முடித்தேன், முதுநிலை உளவியல் ஆலோசகர் கல்வியை முடித்துள்ளேன். மேலும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு வகுப்பு, கிராமப்புற பெண்களுக்கு நம்பிக்கையூட்டும் நிகழ்ச்சிகள் உடல் நலம் சார்ந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தி வருகிறேன் சமூகவலைதளங்களில் உடல்நலம் சார்ந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் ஊனமுற்றோர்க்கு அவர்களுக்கேற்றவாறு எந்த வித எதிர்பார்ப்புமின்றி யோகா பயிற்சிகளை கற்று தந்து கொண்டிருக்கிறேன் இச்சேவைகளுக்காக பல விருதுகளையும் வாங்கி வருகிறேன்.

ஆன்லைன் வகுப்புகள், பள்ளி, கல்லூரிகளிலும் அரசு மருத்துவமனைகளில் கர்ப்பிணிகளுக்கான யோகா பயிற்சிகள், மற்ற நோயாளிகளுக்கும் யோக பயிற்சியை கற்று தந்துவருகிறேன் இதன் மூலம் பல சுகபிரசவங்கள் ஆகியுள்ளது மற்ற நோயாளிகளுக்கு உயர்த்தஅழுத்த நோயும் குறைந்துள்ளது இதற்காக பல உயர் விருதுகளை பெற்றேன்.

உடல் நல ஆலோசனைகள், மனநல ஆலோசனைகள் என ஆன்லைன் வகுப்புகள் மற்றும் நேரடி வகுப்புகள் என எடுத்து கொண்டிருக்கிறேன் என்கிறார் யோகா தனலட்சுமி. பெண்கள் நினைத்தால் சாதிக்க முடியாதது என எதுவுமில்லை தன்னம்பிக்கையும் போராட்ட குணமிருந்தால் எதுவும் சாதிக்கலாம்.

**- சுஜாதா மூர்த்தி**

# வி. சாலையில் நடந்த விஜய் அரசியல் மாநாடு!
# - தடம் மாறுகிறதா தமிழக அரசியல் களம்!

**வி.**சாலையில், விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநில மாநாடு நடந்தது. இந்த மாநாட்டில் பேசிய, தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய், தனது கட்சியின் அடிப்படைக் கொள்கைகளை அறிவித்ததோடு, தமிழக அரசியல் களத்தில் தனது எதிரிகள் யார் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று சொன்னபோதே நாம் நம் எதிரியை முடிவுசெய்துவிட்டோம். நாட்டைப் பாழ்படுத்தும் பிளவுவாத அரசியல் செய்வோர்தான் தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கை ரீதியான முதல் எதிரி," என்றார்.

மேலும், "திராவிட மாடல் ஆட்சி என்று பெரியார், அண்ணா பெயரை வைத்து தமிழ்நாட்டைச் சுரண்டிக் கொள்ளையடிக்கும் ஒரு குடும்ப சுயநலக் கூட்டம்தான் அடுத்த எதிரி," என்று குறிப்பிட்டார்.

இதனால் பாஜக எதிர்ப்பு வாக்குகளும் திமுக எதிர்ப்பு வாக்குகளும் எப்படி தடம் மாறும் என்கிற விவாதங்கள் அரசியல் அரங்கை அனல் பறக்க வைத்துள்ளன.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவை எதிர்த்து தமிழக அரசியலில் தி.மு.க கூட்டணி அமைத்து 40 இடங்களிலும் வெற்றி கண்டது. திமுக கூட்டணியில் காங்கிரஸ்,இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகள், ம.தி.மு.க, விடுதலை சிறுத்தைகள் , இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி, மனிதநேய மக்கள் கட்சி ,கொங்குநாடு மக்கள் கட்சி ஆகியவை கூட்டணியில இடம் பெற்று போட்டியிட்டு வெற்றி பெற்றனர். போட்டியிடாத போதும் தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக இடம்பெற்று சில அரசியல் கட்சிகள் ஆதரவு தந்தன..

எனவே அசைக்க முடியாத கூட்டணி திமுக கூட்டணி என்ற நிலையில் அந்தக் கூட்டணி இருந்து கட்சிகளை இழுப்பதற்காக ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்ற தனது அஸ்திரத்தை நடிகர் விஜய் ஏவினார்.

ஏற்கனவே இந்த அதிகார பங்கு விஷயத்தில் கருத்து தெரிவித்து வரும் விடுதலை சிறுத்தைகள் விஜய் பக்கம் திரும்புவார் என்று கருத்து முன் வைக்கப்படுகிறது இதை திருமாவளவன் திட்ட வட்டமாக மறுத்துவிட்டார் ஆனால் அந்தக் கட்சியில் துணைப் பொதுச் செயலாளராக இருக்கும் ஆதவ்



அர்ஜுன் என்பவர் வெளிப்படையாக ஆட்சியில் பங்கு என்பது விஜய் அறிவித்ததற்கு வாழ்த்து தெரிவித்தார். அவர் தான் விஜய் - திருமாவளவன் சந்திப்புக்கு ஏற்பாடு செய்வதற்காக தனது புத்தகத்தை வெளியீட்டு விழாவில் இருவரையும் அழைக்க இருப்பதாக தகவல்கள் வெளியாகி இருக்கிறது. ஒரே மேடையில் விஜய்-திருமாவளவன் தோன்றும் போது அது பல்வேறு அரசியல் மாற்றத்தை தமிழகத்தில் தடம் மாற்றும் என்ற சூழல் உருவாகி இருக்கிறது.

திரையில் இயக்குனர்கள் இயக்க விஜய் நடிப்பதை போல அரசியலிலும் விஜய் கட்சியை பின்னால் இருந்து பிஜேபி இயக்குகிறது. இல்லை காங்கிரஸ் தான் இயக்குகிறது என்று அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கிறார்கள். விஜய் திமுகவை எதிரி என்று சொல்லிவிட்ட சூழலில் அ.தி.மு.கவில் உள்ள முக்கிய பிரமுகர்கள் கொண்டாட்டமாக அதை பார்க்கிறார்கள். முன்னாள் அமைச்சர்கள் ஜெயக்குமார் ,ஆர்.பி. உதயகுமார், செல்லூர் ராஜு ஆகியோர் விஜய்யின் பேச்சை வரவேற்று இருக்கிறார்கள்.

ஏற்கனவே தீவிரமாக திமுகவை எதிர்த்து வரும் பா.ஜ.க அ.தி.மு.க ஆகிய இரண்டு கட்சிகளின் வாக்குகள் தி.மு.கவின் எதிர்ப்பு வாக்குகள் விஜய்க்கு போகும் என்று அரசியல் விமர்சனங்கள் என்று தெரிவித்து வருகிறார்கள்.

எங்களுக்கு பாதிப்பு இல்லை என்று எல்லா கட்சிகளும் ஒரே குரலில் கருத்து தெரிவித்தாலும் விஜய் அரசியல் கட்சி துவக்கம், மாநாடு, லட்சக்கணக்கில்

கூடிய கூட்டம் ஆகியவை உள்ளுக்குள் உதறலைத் தந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருக்கிறார்கள்.

இந்த நிலையில் அமைச்சர் உதயநிதி நடிகர் அஜித்துக்கு வாழ்த்து சொல்ல அதை சுட்டிக் காட்டிய தமிழிசை சௌந்தர்ராஜன் விஜய் எதிர்க்க வேண்டும் என்பதற்காகவே அஜீத்தை ஆதரிக்கிறார்கள் என்று கருத்து தெரிவித்து களத்தை சூடாக மாற்றுகிறார். விஜய் எதிர்ப்பை சமாளிக்க அஜித்தை முன்னிறுத்துகிறார்கள் என்ற கருத்தின் தாக்கம் போகப் போக தொடர் நடவடிக்கை தெரியவரும்.

கட்சி துவங்கிய போது வாழ்த்து சொன்ன சீமான் விஜய் அவர்கள் தனது தம்பி என்றும் இருவரின் பாதை ஒன்றுதான் என்றும் சொல்லி வந்தார். இதனால் இவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து களம் அமைப்பார்கள் என்ற பேச்சும் இருந்தது. ஆனால் மாநாட்டில் விஜய் பேசிய பிறகு சீமான் கருத்து வேறு மாதிரி ஆக களத்தில் அரசியல் சூடு பிடித்திருக்கிறது.

செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய சீமான், "திராவிடம் என்றால் என்ன? தமிழ் தேசியம் என்றால் என்ன? விஜய் விளக்குவாரா? விஷமும் விஷத்தை முறிக்கும் மருந்தும் எப்படி ஒன்றாக இருக்க முடியும்? வில்லனும் கதாநாயகனும் எப்படி ஒன்றாக இருக்க முடியும்? கொலைகாரன்கூட ஒருவனைத்தான் கொல்வான், குடித்தால் பல பேர் தாலி அறுபடும் என மதுக்கடைகளை மூடச் சொல்வது தமிழ் தேசியம் சமூக நீதியை பேசுகிறார் தம்பி விஜய். அதை திமுகவும்தான் பேசுகிறது. ஆனால், அதை பின்பற்றவில்லை. பாஜக மதவாதம் என்பதுபோல அவர் கருத்து தெரிவித்துள்ளார். எனில் காங்கிரஸ் என்ன, மிதவாதமா? ஊழல் குற்றச்சாட்டுகள் உடைய ஆதிமுக ஆட்சியை ஏன் விஜய் விமர்சிக்கவில்லை? காங்கிரஸும், அதிமுகவும் உங்களுக்கு எதிரி இல்லையா?

"மும்மொழிக் கொள்கை என்பது மோசடி கொள்கை, இரு மொழி கொள்கை என்பது ஏமாற்று கொள்கை. தமிழ் எங்கள் கொள்கை. தமிழ் பயிற்று மொழி, ஆங்கிலம் பயிற்று மொழி. ஆனால் வேண்டுமென்றால் பிற மொழிகளை கற்கலாம்.தமிழக வெற்றிக்கழகத்தின் மொழிக்கொள்கை தவறாக உள்ளது. கொள்கையை மாற்றுங்கள் அல்லது எழுதி கொடுப்பவரை மாற்றுங்கள். எங்களைப் பொறுத்தவரை கொள்கை கோட்பாடுகளை தவிர குடும்ப உறவு முக்கியமில்ல. தம்பி என்பது வேறு, கொள்கை என்பது வேறு...

நான் ஒவ்வொருமுறையும் சொல்வது குட்டிக்கதை அல்ல, வரலாறு. ஆந்திராவில் தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டது, மீனவர்கள் பிரச்னை போன்றவற்றில் விஜய்யின் நிலைப்பாடு என்ன?" என்று கேள்விகள் எழுப்பினார்.

"திராவிடம் வேறு, தமிழ் தேசியம் வேறு. தமிழர்களுக்கு திராவிடம் அயல்மை. தமிழ் தேசியமே பொருந்தும்...பேருண்மை. இரண்டும் ஒன்று எனக் கூறும் அடிப்படையே தவறு. இது கொள்கை அல்ல. ஒன்று சாலையின் அந்தப் பக்கம் நிற்க வேண்டும் அல்லது இந்தப் பக்கம் நிற்க வேண்டும். நடுவில் நின்றால் லாரி அடித்து செத்துவிட வேண்டியதுதான். இது நடுநிலை அல்ல...கொடுநிலை. என்று கடுமையாக பெரம்பூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அவர் கடுமையாக பேசினார்.

சீமான் பேச்சுக்கு பிறகு தமிழக அரசியலில் களம் காண வரும் விஜய் அதை பெரிதாக பொருட்படுத்த வேண்டியதில்லை என்று தங்கள் நிர்வாகிகளிடம் சொன்னதாக செய்தி வெளியாகியுள்ளது. எப்படி ஆயினும் விஜய் நடத்திய மாநாட்டுக்கு பிறகு தமிழக அரசியலில் தடம் மாற்றம், தடுமாற்றம் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பது உண்மை.



# புகார் தெரிவித்தால் மட்டுமே குற்றங்கள் குறைவது சாத்தியம்!

**ஓய்வு பெற்ற கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பாலு சுவாமிநாதன் (சைபர் பாலு) உறுதி!**

இணைய குற்றங்கள் குறைவடைய, அவற்றை வெளிக்கொணர பொதுமக்கள் புகார் அளிப்பது அவசியம்: ஓய்வு பெற்ற கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பாலு சுவாமிநாதன் (சைபர் பாலு) வலியுறுத்துகிறார்.

இணைய குற்றங்களை வெளிக்கொணர பொதுமக்கள் புகார் அளிப்பது மிக அவசியமானது, மேலும் இது ஒட்டுமொத்த சமூகத்தின் பொறுப்பாகும். ஓய்வு பெற்ற கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு. பாலு சுவாமிநாதன் (சைபர் பாலு), மக்கள் தேசிய சைபர் குற்றப் புகார் போர்ட்டல் (www.cybercrime.gov.in) அல்லது இலவச தொலைபேசி எண் 1930க்கு அழைத்து புகார் அளிக்க வேண்டும் என அறிவுறுத்துகிறார். சமீபத்தில் சன் டிவியில் "வணக்கம் தமிழா" நிகழ்ச்சியில் இதைத் தெளிவாக விளக்கினார்.

**சைபர் குற்றங்கள் மற்றும் அதன் வளர்ச்சி**

தொழில்நுட்ப வளர்ச்சியுடன் புதிய குற்றங்கள் உருவாகி வருகின்றன. சைபர் குற்றவாளிகள் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நிதி மோசடி மற்றும் பெண்கள் மீதான தாக்குதல் போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். பாரம்பரிய குற்றங்களை சுலபமாக கண்டறிய முடிகின்றது; ஆனால் சைபர் குற்றங்கள் அடையாளம் காண்பது சட்ட பரப்பளவுகள், சீர்திருத்தக்கூடிய சாத்தியங்கள் ஆகியவற்றினால் சிக்கலாகும்.

"சைபர் குற்றம்" என்ற சொல் 1984ல் வில்லியம் கிப்சன் எழுதிய நியூரோமென்சர் நாவலில் இருந்து வந்ததாகும், மேலும் சைபர் குற்றங்கள் இரண்டு முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன:

1. **நிதி சம்பந்தப்பட்ட குற்றங்கள்:** மற்றவர்களின் கணக்குகள் அல்லது ஐடிகளை தவறாகப் பயன்படுத்தி பணம் திருடுதல் இதில் அடங்கும். பணம் இழந்த உடனே 1930 எண்ணுக்கு புகார் அளிப்பதால் பணத்தை மீட்கவோ அல்லது பரிமாற்றத்தை தடுக்கவோ முடியும்.



2. **தனிநபர் மீதான தாக்குதல்:** இதன்கீழ் பிறரின் புகைப்படங்கள் அல்லது ஆவணங்களை தவறாகப் பயன்படுத்தி அவர்களுக்கு மன உளைச்சல் அளிக்க அல்லது அவமானப்படுத்தும் நோக்கில் இணையத்தில் பதிவேற்றுதல் அடங்கும்.

இவை தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே வருகின்றன, ஏனெனில் குற்றவாளிகள் தண்டனையின் பயம் இல்லாமல் செயல் புரிகின்றனர். இது குறிப்பாக பெண்கள் புகார் அளிக்கத் தயங்குவதால் குற்றவாளிகளுக்கு துணை புரிகின்றது.

**சைபர் மோசடிகள், விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு வழிமுறைகள்**

சமூக ஊடகங்களில் பிரபலமானவர்களின் பெயரில் போலி கணக்குகள் உருவாக்கி அவர்களது



குடும்ப நிலைமைகள் போன்ற காரணங்களை கூறி பணம் கேட்கும் மோசடிகள் பரவலாகிவிட்டன. இதுபோன்ற ஒரு சம்பவம் ஒரு முறை திரு. பாலு சுவாமிநாதன் அவர்களுக்கும் நேரிட்டது; அவர் நண்பர்கள் நேரடியாக அவரிடம் உறுதி செய்தபோது இது உண்மை என்பதை அறிந்தனர்.

இன்றைய AI தொழில்நுட்பம் மூலம் குழந்தைகள் கடத்தப்பட்டு அழும் காட்சிகள் போலி வீடியோக்களாக உருவாக்கப்பட்டு, தாய்மார்கள் மற்றும் குடும்பத்தாரிடமிருந்து பணம் பறிக்க முயற்சிக்கின்றனர்.



**புகார் அளிக்கும் வழிமுறைகள் மற்றும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகள்**

எல்லா சைபர் குற்றங்களுக்கும் இலவச தொலைபேசி எண் 1930ல் புகார் அளிக்கலாம். மேலும், பயன்படுத்தும் அனைத்து சாதனங்களிலும் வெளியே செல்லும் முன் அவற்றை "லாக் அவுட்" செய்தல் மற்றும் பாஸ்வேர்ட்களை அடிக்கடி மாற்றுதல் போன்றவை முக்கியமான பாதுகாப்பு நடவடிக்கைகளாகும்.

**தமிழ்நாட்டில் சைபர் பாதுகாப்பு வளர்ச்சி**

முன்பு தமிழ்நாட்டில் சைபர் குற்றங்களுக்கு மட்டும் ஒதுக்கப்பட்ட இரண்டு காவல் நிலையங்கள் மட்டுமே இருந்தன. தற்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் உதவி கண்காணிப்பாளர் தலைமையில் சைபர் குற்றங்களுக்கான தனி காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

**முடிவுரை**

இத்தகைய குற்றங்களை தடுப்பதில் பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். குற்றம் நடந்த உடனடியாக புகார் அளிப்பதன் மூலம் அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க முடியும் என்று திரு. பாலு சுவாமிநாதன் (சைபர் பாலு) வலியுறுத்தினார்.

தொகுப்பு:
**கி. விடாரண்யம்**, செய்தி ஆசிரியர்

# ரத்தன் டாடாவின் வழியை பின்பற்றி மக்கள் நலப்பணிக்காக 20ஆயிரம் கோடி வழங்கிய தொழில் அதிபர்!

இந்தியாவில் பல்வேறு பணக்காரர்கள் இருந்தாலும்ரத்தன் டாடா போன்றவர்களை மக்கள் கொண்டாடுகின்றனர் . இதற்கு முக்கிய காரணம் அவர்களின் செல்வத்தில் பெரும் பகுதியை மக்கள் நலன் சார்ந்த பணிகளுக்காக வழங்குகியுள்ளனர் , மேலும் மக்கள் நலன் சார்ந்து சிந்திக்கின்றனர் என்பது தான்.

ரத்தன் டாடா அவர்களை பின்பற்றி ரியல் எஸ்டேட் தொழிலதிபரான அபிஷேக் லோதா தன்னுடைய சொத்தில் 20,000 கோடி ரூபாயை பல்வேறு நல பணிகளுக்காக வழங்குவதாக அறிவிப்பு வெளியிட்டுள்ளார். மேக்ரோ டெக் டெவலப்பர்ஸ் என்ற நிறுவனத்தில் லோதா மற்றும் அவரது குடும்பத்தினருக்கு சொந்தமாக இருக்கும் பங்குகளை தங்கள் குடும்பத்தின் கீழ் தொடங்கப்பட்டுள்ள அறக்கட்டளைக்கு வழங்க இருப்பதாக அபிஷேக் லோதா தெரிவித்துள்ளார்.

மேக்ரோ டெக் டெவலப்பர்ஸ் என்பது இந்தியாவை சேர்ந்த மிகப்பெரிய ரியல் எஸ்டேட் நிறுவனம் ஆகும். இந்த நிறுவனத்தின் சந்தை மூலதனம் 1.10 லட்சம் கோடி ரூபாய் இதில் 72% பங்குகளை லோதா குழுமம் கொண்டுள்ளது. மேக்ரோ டெக் டெவலப்பர்ஸ் லிமிடெட் என்பது இந்தியாவில் லோதா என்ற பிராண்டின் ரியல் எஸ்டேட் விற்பனை தொழிலில் ஈடுபட்டுள்ளது. இந்த நிறுவனம் லோதா அறக்கட்டளை என்ற பெயரில் ஒரு அறக்கட்டளையை உருவாக்கியுள்ளது. இதன்படி அபிஷேக் லோதா மற்றும் அவரது குடும்பத்தினர் மேக்ரோ டெக் டெவலப்பர்ஸ் நிறுவனத்தில் தங்கள் வசம் இருக்கும் பங்குகளில் 18 முதல் 19 சதவீத பங்குகளை இந்த அறக்கட்டளை பணிகளுக்காக வழங்க உள்ளனர்.



இதற்காக வரும் ஜனவரி மாதம் ஒரு குழு நியமனம் செய்யப்படும் என அபிஷேக் லோதா தெரிவித்துள்ளார் . கல்வி, பெண்கள் முன்னேற்றம் உள்ளிட்ட பணிகளுக்கு தேவையான உதவிகளை இந்த அறக்கட்டளை வழங்கும் எனக் கூறியுள்ளார். அது மட்டும் இன்றி இந்த பங்குகளில் கிடைக்கும் ஈவுத்தொகையும் இந்த அறக்கட்டளைக்கு வழங்கப்படும் எனக் கூறியுள்ளார். 100 ஆண்டுகளுக்கு முன்னர் டாடா குழுமம் தங்களுடைய சொத்தின் பெரும்பகுதியை டாடா டிரஸ்ட் என்ற அறக்கட்டளை உருவாக்கி அதற்கு வழங்கியது. இது இந்தியர்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர்கள் வழியை பின்பற்றி தான் தற்போது நாங்கள் லோதா பவுண்டேஷன் என்ற அறக்கட்டளை நிறுவி இருக்கிறோம் என அபிஷேக் லோதா தெரிவித்துள்ளார்.





# அமெரிக்க அருங்காட்சியகத்தில் பழனி செப்பேடு!

பழனி முருகன் கோவில் காலசந்தி பூஜைக்காக, 19ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட செப்பேடு, அமெரிக்க அருங்காட்சியகத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டு உள்ளது, என, தொல்லியல் ஆய்வாளர் நாராயணமூர்த்தி கூறினார். திண்டுக்கல் மாவட்டம், பழனி முருகன் கோவில் காலசந்தி பூஜை, திருமஞ்சன கட்டளைக்காக எழுதப்பட்ட பல சமூகத்தினரின் செப்பேடுகள் உள்ளன.

அவற்றில், 19ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ஒரு சமூக செப்பேடு, அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள மெட்ரோபாலிடன் அருங்காட்சியகத்தில், ஆசியப் பிரிவில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

அதன் நகலை ஆராய்ந்ததில், தமிழில் எழுதப்பட்ட இச்செப்பேட்டை, 24 கொங்கு நாடுகளைச் சேர்ந்த ஒரு சமூக மக்கள், பழனி முருகனுக்கு நித்தியப்படிக்கு திருமஞ்சனம், சரமாலை, வில்வ அர்ச்சனைக்காக திருக்கணக்கு பண்டாரத்தை ஏற்பாடு செய்த தகவல் உள்ளது. இச்செப்பேடு, 34.3 செ.மீ., உயரம், 23.8 செ.மீ., அகலத்தில் உள்ளது. இரு பக்கமும், 119 வரிகளில் எழுதப்பட்டுள்ளது.

முகப்பில் பொன்காளி அம்மனும், வேல், சந்திர, சூரியர்களுக்கு நடுவே அப்புச்சி, இடதுபுறம் முருகன் அமர்ந்த நிலையில் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. 'வையம் நீடுக' எனும் பாடலுடன் துவங்கும் இதில், இரு பாடல்களில் முருகனின் புகழ் கூறப்படுகிறது.

இதில், சாலிவாகன ஆண்டும், கலியுக ஆண்டும் தவறாக உள்ளது. கர ஆண்டு பங்குனி 16 திங்கட்கிழமை, பூச நட்சத்திரம் என, எழுதப்பட்டுள்ளது.


கட்டையக் கவுண்டர் கோவில் குறிப்பின் அடிப்படையில், இச்செப்பேடு 19ம் நூற்றாண்டில் எழுதப்பட்டுள்ளது.

சின்னோப நாயக்கர், தவராச பண்டிதர், பழனியப்ப நம்பியார், பாணிபாத்திர உடையார், தலத்துக்கணக்கு காத்தசாமி, பாலைய சாமியார், பச்சகந்தையர், சம்மந்தமூர்த்தி முன்னிலையில் எழுதப்பட்ட இந்த செப்பேட்டில், முருகனின் புகழுக்கு பின், அக்குறிப்பிட்ட சமூகத்தினர் பழனி தண்டாயுதபாணி சுவாமிக்கு செய்தவை குறித்து கூறுகிறது.

இச்செப்பேடு பழனியில் இருந்து, ஆங்கிலேய பெண்ணான கால்கன் என்பவரிடமிருந்து அமெரிக்கா சென்றது. அப்பெண்ணிடம் செப்பேடு சென்றது குறித்த விபரங்கள் தெரியவில்லை.

- பசுமை உமாபதி

# நூலகர் ஒரு சமூக சேவகன்



புதிய சமுதாயம் அமைத்திட, நூலகத்தை பயன்படுத்தும் மாணவர்கள் அனைவருக்கும், ஆசிரியருக்கு ஆசிரியர் என்கிறப் பெயர் பெற்ற நூலகர்களாகிய நாங்கள் மேற்கண்ட சமூகப் பணியைச் சிறப்பாகச் செய்து வருகிறோம். குறிப்பாக நான் மாணவராக இளங்கலை பயின்ற நந்தனம் அரசுக் கலைக் கல்லூரியிலேயே இணைப் பேராசிரியர் நிலையில் நூலகராகப் பணியாற்றுவதால், மேற்கண்ட நற்சிந்தனைகளை வளர்க்க பெரிதும் முயற்சி எடுத்து வருகிறேன்.

### புத்தகங்கள் வாயிலாக நாட்டுப்பற்று ஊட்டுதல்

மாணவர்களிடம் நாட்டுப்பற்று வளர்ந்திட வேண்டும் என்பதற்காக, நான் எனது நூலகத்திற்கு வரும் மாணவர்களிடம் நாட்டுப்பற்றினை வளர்த்த பெருந்தலைவர்களின் நூல்களைக் கொடுத்து படிக்கச் சொல்வேன். முதலில் மாணவர்கள் நான் படிக்கச் சொல்லும் நூல்களைப் படிக்கத் தயக்கம் காட்டினாலும்,பின்னர் நூலகர், நாட்டுப் பற்று குறித்த தகவல்கள் கொண்ட நூல்களைப் படிப்பதன் நமக்கும் நாட்டுப்பற்றின் அருமை குறித்து தகவல்களை அறிந்து அதன்படி செயல்பட வேண்டும் என்கிற சிந்தனை அவருக்குள் இருப்பதால்தான் என்பதை உணர்ந்து புரிந்துக் கொண்ட மாணவர்கள் பின்னர் தொடர்ந்து நூலகத்திற்கு வந்து வரலாறு பேழைக்கு சென்று அங்கிருக்கும் நூல்களைப் பெரிதும் எடுத்துப் படிக்க ஆரம்பித்தனர். இதுவே மாணவர்களுக்குள் நான் ஏற்படுத்திய ஒரு நாட்டுப்பற்றுச் சிந்தனையாகத் தன்னடக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### சமூக அக்கறைப் பெருகிட வேண்டும்

இன்றைய மாணவர்களுக்கு சமூக அக்கறைப் பெருகிட, எனது நூலகத்திற்கு வருகைப் புரியும் மாணவர்களிடம், வகுப்புகள் முடிந்தப் பிறகு கல்லூரியை விட்டுக் கிளம்பும் போது, தான் அமர்ந்துப் படித்த அந்த அறையில் உள்ள மின் விசிறிகள் மற்றும் மின் விளக்குகளை நிறுத்தி விட்டுச் செல்ல வேண்டும். எங்கு எந்தப் பொருள் கீழே கிடைத்தாலும், அவைகளை மாணவர்கள் எடுத்து வைத்துக் கொள்ளக்கூடாது. முடிந்தால் அப்பொருளை உரியவர்களிடம் சேர்க்க வேண்டும். கல்லூரியில் மாணவர்கள் தேவையில்லாத காகிதக் குப்பைகளை மக்கும் குப்பைகள் சேகரிக்கும் கலனிலும், நெகிழி குப்பைகளை மக்காத குப்பைகள் சேகரிக்கும் கலனிலும் சேர்க்க வேண்டும் என்றும் சமூக அறிவை ஊட்டி வருகிறேன்.



### வேலை வாய்ப்புகளைப் பற்றித் தெரிந்துக் கொள்ள வேண்டும்

இன்றைய மாணவர்கள் கல்வியில் கற்பதில் சிறந்த ஆர்வம் காட்டினாலும், அக்கல்விக்கான வேலை வாய்ப்புக்கள் குறித்த விவரங்களை முழுவதுமாக அறிந்துக் கொள்ள வேண்டும். மேலும் அவ்வேலை வாய்ப்புகளுக்கான அறிவிப்புகள் வரும் காலங்களை அறிந்து வைத்திருந்து, அதற்கான முறையான அறிவிப்பின் போது, அதனை நன்கு படித்து சரியான விவரங்களுடன் விண்ணப்பங்களை அனுப்புவதற்கான புரிதல் மிகவும் அவசியமான ஒன்றாக உள்ளது. பல மாணவர்கள் வேலை வாய்ப்புக்கான அறிவிப்புக்களை கவனிக்காமல் விட்டு விட்டு பிறகு தவிப்பதை நானே பலரிடம் கேட்டு வருத்தப்பட்டுள்ளேன். எனவே கல்லூரியில் பயிலும் போது மாணவர்கள் முறையாக கல்லூரி நூலங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தினமும் நூலகத்திற்குச் சென்று, அன்றையச் செய்தித்தாள்கள், இதழ்கள் மற்றும் வேலை வாய்ப்புகள் குறித்த செய்திகளை படிக்கலாம். நூலகர்களிடம் வேலைவாய்ப்புகள் குறித்த தகவல்களைக் கேட்டு பெறலாம். இவ்வாறான செயல்முறைகள் உங்கள் வாழ்க்கையை மேம்படுத்தும் என்பது மட்டும் திண்ணம்.

### எனக்குக் கிடைத்த பரிசு

எனது நூலகத்தில் பயில வரும் மாணவர்களுக்கு இது போன்று பல்வேறு உதாரணங்களுடன் நடைமுறை வாழ்வியலை எடுத்துக் கூறி வருகிறேன். எனது அறிவுரையைச் செவிமடுத்த பல மாணவர்கள் இன்று பல்வேறு நிலைகளில் சிறப்பாக வேலைப் பெற்று பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்குக் கிடைத்த ஒரு பரிசாகவே நான் கருதுகிறேன்.

முனைவர் **இரா.கோதண்டராமன்,** M.A. M.L.I.S., M.Phil., Ph.D.,
கல்லூரி நூலகர் இணைப் பேராசிரியர்
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), நந்தனம்,
சென்னை – 35




# குஜராத்தில் 500 தீர்ப்புகளை வழங்கிய போலி நீதிமன்றம்!

மகாத்மா காந்தி பிறந்த மண் குஜராத்.

சாதாரண நிலையில் இருந்து முதல்வராகி பின் பிரதமராகி கடந்த 10 ஆண்டுகளாக உலக நாடுகளை சுற்றி வரும் பிரதமர் மோடி பிறந்த மண் குஜராத்.

பெருமைக்குரிய குஜராத் மண்ணுக்கு களங்கம் ஏற்படுத்திய ஒரு செய்தி போலி நீதிமன்றம் ஏற்படுத்தி 500 தீர்ப்புகளையும் வழங்கியதுதான்.

குஜராத்தின் அகமதாபாத் நகரை சேர்ந்தவர் மோரிஸ் சாமுவேல் கிறிஸ்டியன் (37). இவர் குஜராத் தலைநகர் காந்திநகரில் வாடகை கட்டிடத்தில் போலி நீதிமன்றத்தை உருவாக்கி உள்ளார். அசல் நீதிமன்றத்தை போன்று போலியாக எழுத்தர்கள், வழக்கறிஞர்களையும் நியமித்து இருக்கிறார். நில விவகாரங்கள் சார்ந்த சிறப்பு தீர்ப்பாயத்தின் நீதிபதி என்று பொதுஅரங்கில் தன்னை அறிமுகப்படுத்தி உள்ளார்.

பல்வேறு நீதிமன்றங்களில் நிலங்கள் சார்ந்து தொடரப்பட்ட வழக்குகளின் மனுதாரர்களை கிறிஸ்டியனின் போலி வழக்கறிஞர்கள் அணுகி உள்ளனர். சிறப்பு தீர்ப்பாயத்தில் விரைந்து தீர்ப்பு வழங்கப்படும் என்று அவர்கள் வாக்குறுதி அளித்து உள்ளனர்.

2019ம் ஆண்டுமுதல் காந்தி நகரில் அவர் போலி நீதிமன்றத்தை நடத்தியிருக்கிறார்.

இந்த நீதிமன்றம் போலி என்று தெரியாத பொதுமக்கள், போலி நீதிபதி மோரிஸ் சாமுவேல்கிறிஸ்டியனின் நீதிமன்றத்தில் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். அசல் நீதிமன்றம் போன்றே போலி நீதிபதி கிறிஸ்டியன் மனுக்கள் மீது விசாரணை நடத்தி உள்ளார். அவரது நீதிமன்றத்தில் நாள்தோறும் காரசாரமான விவாதங்கள் நடைபெற்று உள்ளன.அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட பிறகு கிறிஸ்டியன் தனக்கு சாதகமாக தீர்ப்புகளை வழங்கி வந்துள்ளார்.

"சில ஆண்டுகளுக்கு முன்பு பாபுஜி என்பவர் நில விவகாரம் தொடர்பாக கிறிஸ்டியனின் போலி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். அவர் ரூ.200 கோடி மதிப்பிலான அரசு நிலத்தை ஆக்கிரமித்து வைத்திருந்தார். சுமார் 50 ஆண்டு காலம் அரசு நிலத்தில் குடியிருப்பதால் அந்த நிலத்தை தனது பெயருக்கு பத்திரப்பதிவு செய்ய வேண்டும் என்று பாபுஜி கோரினார்."

இந்த வழக்கை விசாரிக்க போலிநீதிபதி கிறிஸ்டியன், மனுதாரர் பாபுஜியிடம் இருந்து பெரும் தொகையை பெற்று உள்ளார். அரசு மற்றும் மனுதாரர் தரப்பு வாதங்களுக்கு பிறகு குறிப்பிட்ட அரசு நிலம் பாபுஜிக்கு சொந்தமானது என்று கிறிஸ்டியன் தீர்ப்பு வழங்கி உள்ளார். இதுதொடர்பான தீர்ப்பாணையை அகமதாபாத் ஆட்சியரிடம் பாபுஜி வழங்கி உள்ளார். ஆனால் ஆட்சியர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதைத் தொடர்ந்து அகமதாபாத் உரிமையியல் நீதிமன்றத்தில் பாபுஜி வழக்கு தொடர்ந்து உள்ளார். கிறிஸ்டியனின் போலி நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் நகலை இணைத்து ரூ.200 கோடி மதிப்பிலான அரசு நிலத்தை தனது பெயரில் மாற்ற வேண்டும் என்று அவர் மனுவில் கோரியிருந்தார்.

இந்ததீர்ப்புநகலைபார்த்துசந்தேகமடைந்த நீதிமன்ற பதிவாளர் ஹார்திக் தேசாய், போலீஸ்நிலையத்தில் புகார் அளித்தார். போலீஸார் விசாரணை நடத்தியபோது, போலி நீதிபதி மோரிஸ் சாமுவேல் கிறிஸ்டியன் கைது செய்யப்பட்டார்.

# தோப்புக்கரணம் போடுவது உடல் நலத்துக்கு நல்லது!



நமது முன்னோர்கள் ஒவ்வொரு விஷயத்திலும் நமக்கு பல்வேறு நன்மைகளை செய்து கொடுத்து இருக்கிறார்கள். முன்னோர்களின் செயல்பாடுகள், உணவு முறை உள்ளிட்ட எல்லா செயல்களுக்கு பின்னாலும் ஏதோ ஒரு செய்தி இருந்தது . தோப்புக்கரணம் போடுவதும் அப்படித்தான்.

குறிப்பாக படிக்கும் மாணவர்கள் ஏதேனும் தவறு செய்தால் ஆசிரியர் அவர்களை தோப்புக்கரணம் போடச் சொல்லுவார்.

தவறுகளுக்கு ஏற்றார் போல் எண்ணிக்கை கூடும். குறையும். அந்த மாணவன் சரியாக தோப்புக் கரணம் போடுகிறானா என்று இன்னொரு மாணவனை கண்காணிக்க சொல்வார்.இந்த காலத்தில் அது சாத்தியமில்லை காரணம் அதை யாராவது வீடியோ எடுத்து இணையதளத்தில் போட்டு விடுவார்.

தோப்புக்கரணம் போடும் போது மூளையில் உள்ள செல்கள் புத்துணர்ச்சி அடைவதால் அது நம்மை சுறுசுறுப்பாக வைக்க உதவுகிறது. காலை நேரங்களில் தோப்பு கரணம் போட்டால் அது நமக்கு நாள் முழுவதும் சுறுசுறுப்பாக இருக்க உதவி புரிகிறது.

மூளையில் உள்ள வலது மற்றும் இடது பகுதி சமமான தூண்டுதல் அடைய உதவுகின்றது. அதுமட்டுமில்லாமல் மூளைக்கு செய்திகளை பரிமாற்றம் செய்யும் காரணிகள் வலுப்பெற உதவுகிறது.


இந்த எளிமையான உடற்பயிற்சியின் மூலம் நியூரான் செல்கள் புத்துணர்ச்சி அடைகின்றன. தோப்புக்கரணம் போடுவதால் மூளைசெல்கள் புத்துணர்ச்சி பெறுகின்றன. நாடிகள் சுத்தம் பெறுகின்றன.

நம் உடலிலுள்ள நரம்பு மண்டலங்கள் அனைத்தும் சேருமிடம் காது மடல்கள். தோப்புக்கரணம் செய்யும் போது காது மடல்களை இழுப்பதால்

அனைத்து நரம்புகளும் தூண்டப்படுகின்றன.

நம்முடைய தோள்பட்டை அகலத்துக்கு கால்களை பிரித்து வைத்து நிற்க வேண்டும்.இடது கையை மடக்கி இடது கையின் பெருவிரலால் வலது காது மடலின் நுனியைபிடித்து கொள்ள வேண்டும். வலது கையை மடக்கி வலது கையின் பெருவிரலால் இடது காது மடலின் நுனியை பிடித்து கொள்ள வேண்டும். அப்படி பிடிக்கும் போது கட்டை விரல் காதின் முன் புறமும் ஆள்காட்டி விரல் காதின் பின்புறமும் இருக்க வேண்டும். வலது கையானது இடது கையின் மேல் இருக்க வேண்டும். இரு கால்களையும் மடக்கி முதுகை வளைக்காமல் நேராக உட்காரும் நிலையில் தோப்பு கரணம் போட வேண்டும். உட்காரும் நிலை நம்மால் எவ்வளவு முடிகிறதோ அவ்வளவு செய்யலாம். எழும் போது மூச்சை வெளியே விட்டபடி எழ வேண்டும். இதனால் நமக்கு கிடைக்கும் நன்மைகளோ பலப்பல!

# குடற்புழுக்களை நீக்கும் இயற்கை உணவுகள்!



நம் உடலை சீராக வைத்துக் கொள்ளாவிட்டால் வயதான காலத்தில் மிகவும் சிரமப்படுவோம்.

எனவே உடல் நலம் பாதுகாக்க உடலுக்கு தீங்கு விளைவிக்கும் குடல் புழுக்களையும் அதை நீக்கும் உணவு முறைகளையும் அறிந்து கொள்ள வேண்டும்.

குடல் புழுக்கள் என்பது அசுத்தமான பழக்கவழக்கங்களால் உண்டாகிறது... குடல் புழுக்கள் வந்தால் சரியாக சாப்பிட முடியாது. வயிற்றுக் கோளாறுகள் வந்துவிடும். குடல் புழுக்களை குறைந்தது ஆறு மாதத்திற்கு ஒரு முறையாவது நீக்க வேண்டியது அவசியமாகும். குடல் புழுக்கள் வயிற்றில் வளர தொடங்கினால் குறைந்தது ஆறு மாதங்கள் வரையாவது வளரும் தன்மை கொண்டது."

அசுத்தமான சுற்றுப்புறம்தான் குடல்புழுத் தொல்லைக்கு அடிப்படைக் காரணம். குறிப்பாக, தெருவோரங்களைத் திறந்தவெளிக் கழிப்பிடங்களாகப் பயன்படுத்துபவர்களுக்கு இந்தத் தொல்லை அடிக்கடி வருகிறது. அசுத்தமான தெருவில், மண் தரையில், தண்ணீரில் குழந்தைகள் விளையாடுவது, அழுக்கடைந்த பொம்மைகளுடன் விளையாடுவது, காலில் செருப்பு அணியாமல் நடப்பது, உணவு சாப்பிடுவதற்கு முன்னால் கைகளைக் கழுவிச் சுத்தப்படுத்தத் தவறுவது ஆகியவை குடல்புழு ஏற்படுவதற்குத் துணைபோகின்றன.



பூண்டுடை பயன்படுத்தி குடலில் உள்ள புழுக்களை வெளியேற்றும் மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: விளக்கெண்ணெய், மஞ்சள், பூண்டு. ஒரு ஸ்பூன் விளக்கெண்ணெய்யில் பூண்டுகளை துண்டுகளாக்கி போட்டு வதக்கவும். இதில் கால் ஸ்பூன் மஞ்சள் சேர்க்கவும். இதை இருவேளை சாப்பிடும்போது குடல் புழுக்கள் வெளியேறும். வயிறு சுத்தமாகும். செரிமானம் சீராகும். 5 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு விளக்கெண்ணெய் பயன்படுத்த கூடாது.

பூசணி விதையை பயன்படுத்தி மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: பூசணி விதை, தேன். அரை ஸ்பூன் அளவுக்கு பூசணி விதை பொடி எடுக்கவும். இதனுடன் ஒரு ஸ்பூன் தேன் சேர்த்து கலந்து இரவு தூங்கப்போகும் முன்பு சாப்பிட்டு வந்தால் குடல் புழுக்கள் வெளியேறும். பெரியவர்களுக்கு அரை ஸ்பூன் பூசணி விதை பொடியும், குழந்தைகளுக்கு கால் ஸ்பூன் அளவுக்கும் எடுக்கவும். இதை 3 நாட்கள் சாப்பிடலாம். 6 மாதத்துக்கு ஒருமுறை எடுத்துக்கொள்வது நன்மை தரும்.

பப்பாளி விதையை பயன்படுத்தி குடல் புழுக்களை வெளியேற்றும் மருந்து தயாரிக்கலாம். ஒரு ஸ்பூன் பப்பாளி விதை எடுக்கவும். சிறியவர்களுக்கு என்றால் அரை ஸ்பூன் அளவுக்கு எடுக்கவும். இதில் தேவையான அளவு நீர்விட்டு கொதிக்க வைக்கவும். வடிகட்டி தேன் சேர்த்து வாரம் ஒரு முறை என 4 வாரங்கள் குடித்துவர வயிற்று புழுக்கள் வெளியேறும். நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும் வேப்பம் பூவை பயன்படுத்தி மருந்து தயாரிக்கலாம். அரை ஸ்பூன் நெய் காய்ந்ததும் வேப்பம் பூவை சேர்த்து வதக்கவும். இதில், நீர் சேர்த்து உப்பு போட்டு கொதிக்க வைக்கவும். வடிக்கடி மாதம் ஒருறை குடித்துவர குடலில் புழுக்கள் வராமல் இருக்கும்.

# அமெரிக்க அதிபர் தேர்தல் நடைமுறை என்ன?

அமெரிக்காவில் நான்கு வருடங்களுக்கு ஒருமுறை அதிபர் தேர்தல் நடைபெறும் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், ஒவ்வொரு முறையும் எந்த தேதியில் வாக்குப் பதிவு நடைபெறும்? எந்த தேதியில் புதிய அதிபர் பதவியேற்பார் என்பதும் அரசியலமைப்புச் சட்டத்தில் இடம்பெற்றுள்ளது. நவம்பர் மாதத்தின் முதல் செவ்வாய்க்கிழமை வாக்குப் பதிவு நடைபெறும். அதற்கு அடுத்த ஆண்டு ஜனவரி 20ம் தேதி புதிய அதிபர் பதவியேற்பார்.

அமெரிக்காவில் மக்கள் நேரடியாக ஓட்டு போட்டு அதிபரை தேர்ந்தெடுப்பதில்லை. அதற்கு பதிலாக, அதிபரை தேர்ந்தெடுக்கக்கூடிய தேர்வுக் குழுவுக்கே வாக்களிப்பார்கள். தேர்வுக் குழுவினரே, ஓட்டு போட்டு அதிபரை தேர்வு செய்வார்கள். அந்த குழுவுக்கு எலக்டோரல் காலேஜ் (Electoral College) என்று பெயர். மக்கள் தொகையைப் பொறுத்து ஒவ்வொரு மாநிலத்திற்கும் குறிப்பிட்ட எலக்டோரல் காலேஜ் வாக்குகள் இருக்கும். மொத்தம் 538 வாக்குகள். இதில் 270 வாக்குகளுக்கு மேல் பெறும் வேட்பாளர் அதிபராக பதவியேற்பார்.

நாடாளுமன்றத்தில் எத்தனை உறுப்பினர்கள் இருக்கிறார்களோ அதே எண்ணிக்கையிலான






உறுப்பினர்களை தேர்வுக் குழுவும் கொண்டிருக்கும். தேர்வுக் குழுவுக்கும் நாடாளுமன்றத்திற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. அதிபரை தேர்ந்தெடுப்பதை பணியாகக் கொண்ட தேர்வுக் குழுவினரின் வாக்குகளைப் பெறுவதற்கு வேட்பாளர்கள் போட்டியிடுவார்கள்.

ஒருவகையில், வாக்காளர்கள் மாநில அளவில் கட்சிகளின் பிரதிநிதிகளைத்தான் தேர்ந்தெடுக்கிறார்கள். தேசிய அளவில் போட்டியிடும் வேட்பாளர்களை அல்ல.

மைனே மற்றும் நெப்ராஸ்கா மாநிலங்கள் தவிர மற்ற அனைத்து மாநிலங்களிலும் 'வெற்றி பெற்றவர் அனைத்து வாக்குகளையும் எடுத்துக்கொள்வார்' என்ற விதி உள்ளது. அதாவது எந்த வேட்பாளர் அதிக எண்ணிக்கையிலான மக்களின் வாக்குகளைப் பெறுகிறாரோ அவருக்கு அந்த மாநிலத்தின் அனைத்து எலக்டோரல் காலேஜ் வாக்குகளும் வழங்கப்படும். இதற்கு 'வின்னர் டேக்ஸ் ஆல்' என்று பெயர். அதனால்தான் 2016ல் ஹிலாரி கிளிண்டன் தேசிய அளவில் மக்களின் வாக்குகளை அதிகம் பெற்றாலும், எலக்டோரல் காலேஜ் வாக்குகளை குறைவாக பெற்றதால் டிரம்பிடம் தோல்வியைத் தழுவினார். எனவே, தேசிய அளவில் அதிக வாக்குகளைப் பெற்றாலும் தோல்வியடைவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் தேர்வுக் குழு உறுப்பினர்கள், தங்களது கட்சியைச் சேர்ந்த அதிபர் வேட்பாளருக்குத்தான் வாக்களிக்க வேண்டும் என்று எந்த அரசியலமைப்பு கட்டாயமும் கிடையாது. அதிபர் தேர்தல் முடிந்து புதிய அதிபரை தேர்ந்தெடுத்தபின் தேர்வுக்குழு கலைக்கப்பட்டுவிடும்.

# 'க்', 'ச்' எங்கே போட வேண்டும்! வாங்க இலக்கணம் அறியலாம்!

இரண்டு சொற்களுக்கு இடையே ஒற்று மிகுவதும் உண்டு. மிகாமல் இருப்பதும் உண்டு. ஒற்று என்பது தன்மேல் புள்ளியுடைய மெய்யெழுத்து. ஒற்றெழுத்து என்றும் அழைப்பர்.

வாக்கியமாக எழுதும்போது முதற்சொல், இரண்டாம்சொல், மூன்றாம் சொல் என்று சொற்களின் நீண்ட சங்கிலி அமைப்பு தோன்றும். அந்த வாக்கிய அமைப்பில் இரண்டு சொற்களுக்கு நடுவில் ஒற்றெழுத்து தோன்றுமா, தோன்றாதா என்பதை நாம் கற்றிருக்க வேண்டும்.

மெய்யெழுத்துகள் மொத்தம் பதினெட்டு என்பது தெரியும். அவற்றில் க, ச, த, ப வரிசை எழுத்துகளில் தொடங்கும் சொல் வாக்கியத்தில் தோன்றும்போது, அச்சொல்லுக்கு முன்னுள்ள சொல்லின் இறுதியில் க், ச், த், ப் ஆகிய மெய்யெழுத்துகள் தோன்றுமா? தோன்றாதா? இதுதான் கேள்வி.

இவை நான்கும் வல்லின மெய்யெழுத்துகள், ஆகையால் வலிமிகுதல் என்றும் கூறுவர்.

சொற்கள் நான்கு வகைப்படும். பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் ஆகியன அவ்வகைகள். இவற்றில் பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் வாக்கியத்தில் மிகுதியாய்த் தோன்றும்.

தனியாய் இருப்பது சொல். இரண்டோ இரண்டுக்கும் மேற்பட்டோ சொற்கள் தொடர்ந்தால் அது சொல் தொடர். சொற்றொடர் என்று சேர்த்துச் சொல்வார்கள். சொல்வோம்.







இரண்டு பெயர்ச் சொற்களுக்கு இடையில் ஒற்று தோன்றுமா? பெரும்பாலும் தோன்றும், வலிமிகும் என்பதே உண்மை.

தண்ணீர்க் குடம். பள்ளிக் கூடம். இந்த எடுத்துக்காட்டுகளைக் கவனியுங்கள். தண்ணீர், குடம் இரண்டும் பெயர்ச்சொற்கள். பள்ளி, கூடம் இரண்டும் பெயர்ச்சொற்கள். இவை தொடராய் ஆகும்பொழுது இரண்டாம் சொல் எந்த வல்லின மெய்யில் தொடங்குகிறதோ அந்த ஒற்றெழுத்து மிகுந்தது. கூடுதலாய்த் தோன்றியது.

கு என்பது 'க ' வரிசை எழுத்து. அதனால் க் ஒற்று மிகுந்தது. தண்ணீர்க்குடம். பள்ளிக்கூடம் என்பதும் இவ்வாறுதான்.

எடுத்துச் சென்றான், எழுந்து சென்றான். இந்த எடுத்துக்காட்டுகளைக் காணுங்கள். கண்டு படியுங்கள். இவை இரண்டும் வினைச்சொற்கள். எடுத்துக்கு வலிமிகுந்தது. எழுந்துக்கு வலி மிகவில்லை.

இலக்கணத்தில் குற்றியலுகரம் பற்றி அறிந்திருப்போம். எடுத்து, எழுந்து ஆகியன உகரத்தில் (து) முடிவதால் இவை குற்றியலுகரச் சொற்கள்.

எடுத்து என்பதில் கடைசி எழுத்துக்கு முன்னுள்ள எழுத்து வல்லின மெய் என்பதால், அது வன்தொடர்க் குற்றியலுகரம். எழுந்து என்பதில் கடைசிக்கு முன்னெழுத்து மெல்லின மெய் என்பதால் மென்தொடர்க் குற்றியலுகரம். வன் தொடர்க் குற்றியலுகரத்திற்கு வலிமிகும். 'எடுத்துச் சென்றான்' என்று வந்தது. மென் தொடர்க் குற்றியலுகரத்திற்கு வலிமிகாது.

'எழுந்து சென்றான்' என்று தான் வருமே.

_பெ.விண்ணக வேளாங்கன்னி வின்சி



# உடலுக்கு தீங்கு தரும் உணவு வகைகள்!

தமிழகத்தில் உணவு பெரும் வணிகம் ஆகிவிட்டது. எல்லோரும் எதையாவது தின்று கொண்டே இருக்க வேண்டும் என்று ஒட்டுமொத்த தமிழகமும் வடிவமைக்கப்பட்டிருக்கிறது . அதில் எதுவுமே வழக்கமான உணவு வகை கிடையாது. உதாரணமாகச் சோறு, இட்லி, தோசை, பொங்கல், உப்புமா போன்றவை ஏளன உணவு பொருளாகப் பார்க்கப்படுகிறது. பல உணவகங்களில் இவை இல்லை.

ரொட்டி வகைகளும், கறி வகைகளும் மட்டுமே இரவு உணவில் பெரிதும் பரிமாறப்படுகிறது. மதிய வேலைகள் கூடச் சோற்றை விடப் பிரியாணி வகைகள், பரோட்டா வகைகள், அதிகம் காணப்படுகிறது.





இந்த வரிசையில் காலை உணவு மட்டும் பெரிதும் பாதிக்கப்படவில்லையென நம்புகிறேன். விரைவில் அதனையும் ஓட்ஸ், பர்கர், சாண்ட்விச், நூடுல்ஸ், பாஸ்தா போன்ற உணவு வகைகளால் நிரப்பப்படலாம்... தொடர் தொலைக்காட்சி விளம்பரங்கள் அதனைத் தான் புகுத்திக் கொண்டிருக்கிறது.

ஒரு கடையில் 99 வகை பரோட்டாக்கள் கிடைக்குமென்ற பலகையைப் பார்த்து இதுவரை குழம்பிக் கொண்டே இருக்கிறேன். ஐஸ்கிரீமை கூடப் பொரித்து தின்கிறார்கள்.

உலகில் உள்ள அனைத்து வகை உணவுகளும் தமிழகத்தில் கிட்டத்தட்ட அனைத்து இடங்களிலும் கிடைக்கிறது. திக்கு எங்கிலும் பேக்கரி, அதிலும் விற்கப்படும் பொருட்கள் அங்குச் செய்வதில்லை, யாரோ ஒருவர் செய்து அனைத்திற்கும் வழங்குகிறார்.

சுவை என்பது கூடப் பழைய சுவை இல்லை, அதிகப்படியாக டால்டா கலப்பு போன்றவை இருக்கிறது.

நாக்கில் வைத்தவுடன் கரைய வேண்டும். உணவை மக்கள் முதலில் விழி வழி உண்கிறார்கள், கண்களால் தின்கிறார்கள்.

பிறகு கண்டதையெல்லாம் வாங்கி பிடித்ததை தின்றுவிட்டு பிடிக்காததை தூக்கி எறிகிறார்கள்.

முன்பெல்லாம் வெளியே செல்லும் நேரத்தில் வீட்டுக்கு வந்து சமைக்க நேரம் இல்லாத காரணத்தினால் வெளியே உணவருந்தும் பழக்கம் இருந்தது.

ஆனால் இப்போது எந்த நேரத்திலும் அதனை ஆர்டர் செய்தால் வீட்டுக்கே வரும் என்ற எண்ணம் வந்துவிட்டது. இங்குப் பசி பேசப்படுவதில்லை, ருசி மட்டுமே பேசப்படுகிறது. ஒவ்வொரு நிலப்பகுதியின் உணவும் அந்தந்த நில சூழலுக்கு ஏற்ற மாதிரி உருவாக்கப்பட்டது. ஆனால் அவை அனைத்தையும் அனைத்து இடங்களுக்கும் கொண்டு சேர்ப்பது மனிதர்களின் மரபணுவைச் சிதைக்கும் பெரும் தீங்கு ஏற்படுகிறது.

# எந்த குழந்தையும் மேதை ஆகலாம்!

'விளையும் பயிர் முளையிலே' என்று சொல்வார்கள். ஆனால் எந்த ஒரு முளையும் தானாகச் செழித்து வந்துவிடாது. விதை ஒன்றை மண்ணில் ஊன்றிய பிறகு அந்த விதைக்குத் தேவையான தண்ணீர், எரு போன்றவைகளை இட்டு அந்த விதை முளைவிட்டு வரும்போது எந்த ஒரு பூச்சியும் அண்ட விடாமல் பார்த்துக் கொண்டால்தான் ஓர் ஆரோக்கியமான செடி உண்டாகும். அதே போன்றுதான் ஒரு குழந்தை பிறந்து வளரும்போது அந்தக் குழந்தைக்குத் தேவையான பல பரிமாணங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். எந்தெந்த காலகட்டத்தில் எந்த மென்திறமைகள் (Soft skill) வளருமோ அதை மனதில் கொண்டு பெற்றோர்கள் செயல்பட வேண்டும். குழந்தை வளர்ப்பு என்பது பெற்றோர்களின் ஒரு மிக முக்கியமான பங்கு.

பல பெற்றோர்களுக்குக் குழந்தை வளர்ப்பில் எந்தெந்த காலகட்டத்தில் என்னென்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய தெளிவு இருப்பதில்லை. ஒரு பயிர் வளரும்போது எப்படி காலத்திற்கேற்றாற் போல கவனிப்புத் தேவையோ அதே போன்றுதான் குழந்தை வளர்ப்பும். எனவேதான் "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே” என்று சொன்னார்கள். குழந்தை வளர்ப்பைப் பற்றி பல ஆராய்ச்சிகள் இன்றுகூட நடந்து கொண்டுதான் வருகின்றன. அந்த ஆராய்ச்சியின் சில அம்சங்களை இங்கு பார்க்கப் போகிறோம்.

குழந்தை வளர்ப்பில் பிறந்ததிலிருந்து 18 மாதங்கள் என்பதை ஒரு பகுதியாகவும், 18 மாதத்திலிருந்து 60 மாதங்கள் என்பதை இரண்டாவது பகுதியாகவும் நாம் கொள்ளலாம். இந்த இரண்டு பகுதிகளில் உணர்ச்சிகள் (Emotion), நரம்பு மற்றும் தசைகள் சம்பந்தப்பட்ட அசைவுகள் (Motor skills), பார்வை, கேட்கும் திறமை, யோசனை செய்யும் திறமை, இசை மற்றும் உணவு என்று பாகுபடுத்தி இவைகளை வளர்க்கத் தகுந்த செயல்களை நாம் செய்ய வேண்டும். முதல் 18 மாதங்களில் நம் குழந்தைகளைக் கொஞ்சியும், பாதுகாப்பான சூழ்நிலையை ஏற்படுத்தியும் வளர்க்க வேண்டும். குழந்தையைக் கட்டியணைத்து, சிரித்து விளையாட வேண்டும், அச்சுறுத்தலை (Threat) முழுமையாகத் தவிர்க்க வேண்டும். இப்படிச் செய்வதால் அந்தப் பிஞ்சுக் குழந்தை உணர்வுப்பூர்வமாக மிகவும் ஆரோக்கியமாக வளருகிறது. இதே காலகட்டத்தில் குழந்தையையும் உட்கார உற்சாகப்படுத்த வேண்டும். சைக்கிள் போன்ற விளையாட்டுச் சாமான்கள், சப்தம் போடக்கூடிய பொருட்கள் போன்றவைகளைக் குழந்தைகளிடம் கொடுத்து விளையாடச் செய்வதால் குழந்தைகளின் Motor skills வளருகிறது.

இதே காலகட்டத்தில் கண்களுக்குக் குளுமையான பலவிதமான நிறங்களில் விளையாட்டுப் பொருட்களை வாங்கிக் கொடுத்து விளையாடச் செய்வதால் கூர்மையான பார்வையைக் குழந்தைகள் பெறுகிறார்கள். இந்தப் பருவத்தில் கம்ப்யூட்டர் கேம்ஸ் மற்றும் டெலிவிஷன் காட்சிகளை முழுமையாகத் தவிர்க்க வேண்டும். இந்த இரண்டும் கண் பார்வைக்கு அதிகமான பாதிப்பு ஏற்படுத்துகிறதென்று ஆராய்ச்சியாளர்கள் திடமாக நம்புகிறார்கள்.

அடுத்து நாம் வளர்க்க வேண்டியது கேட்கும் திறமை. இந்தக் காலகட்டத்தில் குழந்தையோடு நாம் பேசி, குழந்தைகள் பேசுவதைக் கேட்டு உற்சாகப்படுத்த வேண்டும். இனிமையான பாடல்கள், இசை, போன்றவைகளைக் கேட்க வைத்து இந்தத திறமையை வளர்க்க வேண்டும்.

இந்தப் பருவத்தில்தான் குழந்தைகள் யோசனை செய்ய ஆரம்பிக்கிறார்கள். 1 வயதிலிருந்து 1 1/2 வயது வரை சிறு சிறு யோசனைகளைச் செய்யக்கூடிய பயிற்சிகளை நாம் செய்ய வைக்கலாம். விளையாட்டுப் பொருட்கள் விற்கும் கடைக்கு போனால் 18 மாதக் குழந்தைகளுக்கான பொருத்தமான விளையாட்டுப் பொருட்கள் கிடைக்கும். நிறங்களைக் காண்பித்து “என்ன நிறம் என்று கேட்பது?”, சப்தங்களைக் கேட்கச் சொல்லி, “என்ன சப்தம் என்று கேட்பது?" போன்ற யோசனையைத் தூண்டும் விளையாட்டுகளில் குழந்தைகளை ஈடுபடுத்தலாம்.





ஆக, பிறந்ததிலிருந்து 18 மாதங்கள் ஆக்கப்பூர்வமாகச் செயல்பட்டு கருத்தோடு குழந்தையை வளர்த்தால் பிற்காலத்தில் அந்தக் குழந்தை நல்ல நிலைக்கு வர ஓர் ஆழமான அஸ்திவாரம் போட்டது போல ஆகிவிடும்.

நாம் அடுத்துப் பார்க்க வேண்டியது 1 1/2 வயதிலிருந்து 5 வயது வரை. இந்த வயதில் குழந்தைகள் மற்றவர்களைப் பார்த்து அவர்களைப் போலவே நடந்து கொள்ள கற்றுக் கொள்கிறார்கள். தங்களைச் சுற்றிப் பார்க்கும் உணர்ச்சிகளைப் புரிந்து கொண்டு அந்த உணர்ச்சிகளைத் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்கிறார்கள். மகிழ்ச்சி, பயம், நெகிழ்வு போன்ற உணர்ச்சிகள் இந்தப் பிராயத்தில்தான் குழந்தைகளுக்குள் உருவாகிறது. என்ன செய்ய வேண்டும்? என்ன செய்யக் கூடாது என்று தகுந்த முறையில் எடுத்துச் சொல்லி வளர்க்க வேண்டிய பிராயமிது. சப்தம் போடுவது, மிரட்டுவது, அடிப்பது போன்ற உணர்ச்சிகள் இந்தப் பிராயத்திலுள்ள குழந்தைகளை அதிகமாகப் பாதிக்கும்.

இந்தப் பிராயத்தில் ஓடிப் பிடித்து விளையாடுதல், ஒளிந்து விளையாடுதல், சைக்கிள் ஓட்டுதல், ஓவியம் வரைதல் போன்ற செயல்களில் ஈடுபடுத்துங்கள். ஓடி, ஆடி விளையாடவேண்டிய இந்த வயதில் ஒரே இடத்தில் இருக்கச் சொல்லுவது போன்ற செயல்கள் குழந்தைகளின் Motor Skills களைப் பாதிக்கும்.

இந்தப் பிராயத்தில் பார்க்கும் திறனை நாம் துல்லியமாக வளர்க்க வேண்டும். கவனித்துப் பார்த்தல் (Focus Looking) சம்பந்தப்பட்ட விளையாட்டுகளில் நாம் குழந்தைகளை ஈடுபடுத்த வேண்டும். தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் வீடியோ கேம்ஸ் இந்த வயது குழந்தைகளின் பார்வைத் திறனை அதிகமாகப் பாதிக்கும்.

இந்தப் பிராயத்தில்தான் குழந்தைகளின் கேட்கும் சக்தியையும் நாம் அதிகரிக்க வேண்டும். குழந்தைகளுடன் தொடர்ந்து பேச வேண்டும். தாய்மொழியோடு சேர்ந்து ஆங்கிலம் அல்லது இந்தி போன்ற பிறமொழிகளைக் கற்க ஆரம்பிப்பதற்கு இதுதான் சரியான நேரம். 3 வயது 6 மாதங்கள் முடியாமல் எந்தக் குழந்தையையும் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பக் கூடாது. இந்தப் பிராயத்தில் நாம் குழந்தைகளிடம் சுவாரஸ்யமான கேள்விகளை அதிகமாகக் கேட்க வேண்டும்.

அடிப்படையான கணக்கு (basic maths), நம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளைப் பற்றி யோசனை செய்தல் போன்ற திறமைகளை நாம் இந்தப் பிராயத்தில் வளர்க்க வேண்டும். இந்தப் பிராயத்தில்தான் இசையைக் கற்றுக் கொடுக்க ஆரம்பிக்க வேண்டும். இனிமையான இசையை மிக மெல்லியதாக சதா டேப்பில் போட்டுக் கொண்டிருக்கலாம்.

முதல் 18 மாதங்களில் தாய்ப்பால் மற்றும் பசும்பால் போன்ற சத்து மிகுந்த உணவைக் கொடுக்க வேண்டும். 1 1/2 வயதிலிருந்து 5 வயது வரை அதிகமான அளவு காய்கறிகள் மற்றும் வைட்டமின் நிறைந்த உணவுகளைக் கொடுத்து நாம் குழந்தைகளை வளர்க்க வேண்டும்.

ஆக, ஏதோ பிறந்தது, வளர்ந்தது என்று இருக்காமல், மிகவும் அக்கறையுடன் அந்தந்த காலத்திற்குத் தகுந்தாற்போல செயல்பாடுகளைச் செய்து வந்தால் பிற்காலத்தில் நமது குழந்தைகள் அறிவு ஜீவிகளாக, புத்திக்கூர்மையுடன் வளர்வதற்கு சாத்தியக் கூறுகள் அதிகம்.

இந்தக் கட்டுரையைப் படித்த பிறகு உங்கள் வீட்டில் ஐந்து வயதிற்குள் குழந்தைகள் இருந்தால் நீங்கள் வளர்க்கும் விதமும் இந்தக் கட்டுரையில் சொல்லப்பட்ட விதமும் ஒரே மாதிரியாக இருக்கிறதா அல்லது முரண்பாடாக இருக்கிறதா என்று சற்றே யோசனை செய்து பாருங்கள்.

**– என்.சி.ஸ்ரீதரன்**

தகவல் அனுப்பியவர்: **ஆனைமலை முத்துராஜ்**

# தக்காளியின் மருத்துவ குணங்கள்



பழுத்த தக்காளி பழத்தில் நோய்த்தடுப்பு வைட்டமின் 'சி' அதிகமாய் இருக்கிறது. சிறுநீர் எரிச்சல், மேக நோய், உடலில் வீக்கம், உடல் பருமன், நீரிழிவு, குடல் கோளாறுகள், கல்லீரல் கோளாறுகள் முதலிய நோய் உள்ளவர்கள் 5, 6 பழங்களைச் சிறிது தண்ணீர் விட்டு சாறாக்கி அருந்தினால் நோய் குணமாகும். நாக்கு வறட்சியும் அகலும்; உடலும் மினுமினுப்பாய் மாறும். உடல் பருமன் குறையும்!

பழத்தில் கால்சியம், பாஸ்பரஸ், வைட்டமின் 'சி', வைட்டமின் 'ஏ' முதலியவை அதிக அளவில் உள்ளன. இதனால் உடலுக்குச் சத்துணவும் கிடைப்பதுடன்100 கிராம் தக்காளிப் பழத்தில் கிடைக்கும். கலோரி 20 என்பதால் எவ்வளவு சாப்பிட்டாலும் உடல் பருமன் அதிகரிக்காது.

தக்காளி உடலில் உள்ள நோய்க்கிருமிகளை முற்றிலும் அடித்து விரட்டுகிறது. அதனால்தான் உலகம் முழுவதும் விரும்பிப் பருகப்படும் பானங்களுள் தக்காளிச் சாறும் ஒன்றாய் இருக்கிறது.

உடல் பருமனைக் குறைக்க விரும்புகிறவர்கள் தொடர்ந்து ஓரிரு மாதங்கள் காலைப் பலகாரமாய் பழுத்த இரு தக்காளிப் பழங்களைச் சாப்பிட்டால் கொழுத்த சரீரம் கட்டுப்படும். எடை கூடாது. காரணம், அதில் மாவுச்சத்து குறைவாய் இருப்பதுதான். அத்துடன் உடலுக்கு மேற்கண்ட தாது உப்புகளும், வைட்டமின்களும் கிடைத்துவிடுகின்றன.



தக்காளிச்சாறு நீரிழிவுக்காரர்களின் சிறுநீரில் சர்க்கரையின் அளவைக் கட்டுபடுத்துகிறது. இரவு நேரத்தில் பார்வை சரியாகத் தெரியாதவர்கள் தக்காளிச்சாறு சாப்பிடவேண்டும். அப்போதுதான் பறித்த தக்காளிச் செடியின் இலைகளை 15 நிமிடங்கள் சுடுதண்ணீரில் வைக்கவும். பிறகு, வடிகட்டி தண்ணீரில் ஒரு தேக்கரண்டி மட்டும் சாப்பிடவும்.செடியின் தண்டை அரைத்து, அதில் வினிகரையும் கலந்து மார்புகளின்மீது வைத்துக் கட்ட வேண்டும். இதனால் தாய்ப்பால் நன்கு சுரக்கும்.

காலையில் எழுந்ததும் ஏற்படும் காய்ச்சல், பித்த வாந்தி, கல்லீரல் ஆகியன தொடர்பாக ஏற்படும் மஞ் சள் காமாலை, மலச்சிக்கல், உணவு செரியாமை, வாயுத்தொந்தரவு, நெஞ்செரிச்சல் முதலியவை குணமாக ஒரு டம்ளர் தக்காளிச்சாறு போதும். காலையில் வெறும் வயிற்றில் தலா ஒரு சிட்டிகை உப்பு, மிளகுத்தூள் சேர்த்து இந்தச் சாற்றை அருந்த வேண்டும்.காச நோய், நுரையீரல் நோய், ஆஸ்துமா போன்ற மூச்சுக் குழல் நோய்களும் இச்சாறால் குணமாகின்றன.

பூண்டு, இஞ்சி, சீரகம், மிளகு, உப்பு ஆகியவற்றைச் சேர்த்து நல்லெண்ணெயில் தக்காளி சூப்பாகவும் அருந்தலாம். இந்த முறையும் உடலுக்கு நல்லதே. நோயின் போது ஏற்படும் நாக்கு வறட்சிக்கு இப்படித் தக்காளி சூப் மிகவும் நல்லது. தக்காளியில் உள்ள இரும்புச்சத்து எளிதில் ஜீரணமாகிறது. அத்துடன் முழுமையாக உடலில் கலந்துவிடுகிறது. இதனால் இரத்த சோகை நோயாளிகள் விரைந்து குணமாகிறார்கள். இவர்கள் தக்காளிச்சாறு இரண்டு அல்லது மூன்று தினமும் அருந்த வேண்டும்.



# தெரியாதவர்களிடமிருந்து பணம் வருகிறதா? கவனமாக இருங்க!

'ஆன்லைன்' வாயிலாக பணமோசடி செய்யும் சைபர் குற்றவாளிகள், தற்போது, புதிய உத்தியை கையாண்டு வருகின்றனர். அவர்கள், பொது மக்களுக்கு, 'கூகுள் பே' வாயிலாக, 1,500 2,000 ரூபாய் வரை அனுப்புகின்றனர். பிறகு பணம் அனுப்பப்பட்ட நபரை தொடர்பு கொண்டு, நான் மாற்றுத்திறனாளியான குழந்தையை, மருத்துவமனையில் சேர்த்துள்ளேன். உங்களுக்கு தவறுதலாக பணம் அனுப்பி விட்டேன். அந்த பணத்தை நான் கூறும், மொபைல் எண்ணிற்கு அனுப்புங்கள் அல்லது 'கியூ.ஆர்., கோடு' அனுப்புகிறேன். அதை, 'ஸ்கேன்' செய்து அனுப்புங்கள் என்று கூறுகின்றனர்.

அவர்களிடம், நான் காவல் நிலையத்தில் பணத்தை ஒப்படைத்து விடுகிறேன். உங்களுக்கு என்னால் அனுப்ப முடியாது என்று கூறி விடுங்கள். இத்தகைய சைபர் குற்றவாளிகள், உங்களின் வங்கி கணக்கு உள்ளிட்ட விபரங்களை திருடி, பணத்தை மோசடி செய்ய முயற்சிக்கின்றனர்.



எஸ்.சூர்யா

இவர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இந்த மோசடி முயற்சி குறித்து, கட்டணமில்லா, 1930 என்ற எண்ணிலும், www.cybercrime.gov.in என்ற இணையதளத்திலும் புகார் அளியுங்கள்.



# சிந்தனைகள் பல !

**சி**ந்தனை என்பது நம் மனம் பல விஷயங்களை ஆராய்ந்து, புரிந்து கொண்டு, புதிய யோசனைகளை உருவாக்கும் ஒரு செயல். இது நாம் வாழ்க்கையில் எடுக்கும் முடிவுகளுக்கு அடிப்படையாக அமைகிறது. சிந்தனை என்பது நம்மை சுற்றியுள்ள உலகத்தைப் பற்றி கேள்விகள் கேட்டு, பதில்களைக் கண்டுபிடிக்கும் ஒரு பயணம் போன்றது.

சிந்தனை பல வகைகளில் இருக்கும்:

* தர்க்கரீதியான சிந்தனை: இதில் நாம் உண்மைகளை ஆதாரமாகக் கொண்டு முடிவுகளை எடுப்போம்.
* படைப்பு சிந்தனை: இதில் நாம் புதிய யோசனைகளை உருவாக்கி, பிரச்சினைகளுக்கு புதிய தீர்வுகளை கண்டுபிடிப்போம்.
* சிந்தனை: இதில் நாம் ஒரு விஷயத்தை பல பகுதிகளாக பிரித்து ஆய்வு செய்து, அதைப் பற்றி ஆழமாக புரிந்து கொள்வோம்.

சிந்தனை நமக்கு எதற்கு உதவும்?

* முடிவுகளை எடுக்க: சிந்தனை மூலம் நாம் பல்வேறு விருப்பங்களை ஆராய்ந்து, எந்த விருப்பம் சிறந்தது என்பதைத் தேர்வு செய்யலாம்.
* பிரச்சினைகளை தீர்க்க: சிந்தனை மூலம் நாம் பிரச்சினைகளின் காரணத்தை கண்டுபிடித்து, அதற்கான தீர்வுகளை கண்டுபிடிக்கலாம்.
* புதிய விஷயங்களை கற்றுக்கொள்ள: சிந்தனை மூலம் நாம் நம்மை சுற்றியுள்ள உலகத்தைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ளலாம்.
* படைப்பாற்றலை வளர்க்க: சிந்தனை மூலம் நாம் புதிய யோசனைகளை உருவாக்கி, படைப்பாற்றலை வளர்க்கலாம்.

சிந்தனை என்பது நம் வாழ்க்கையின் முக்கியமான ஒரு பகுதி. நாம் தினமும் பல விஷயங்களைப் பற்றி சிந்திக்கிறோம். சிந்தனையை வளர்த்துக் கொள்வதன் மூலம் நாம் நம் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ளலாம்.

உங்களுக்கு வேறு ஏதாவது கேள்விகள் இருந்தால் கேளுங்கள். உதாரணமாக, நீங்கள் "சிந்தனை எப்படி வளர்க்கலாம்?" அல்லது "சிந்தனையின் முக்கியத்துவம் என்ன?" என்ற கேள்விகளைக் கேட்கலாம்.

# உனக்கும் கீழே உள்ளவர் கோடி!

உண்ண உணவும்.. உடுத்த உடையும்.. வசிக்க இடமும் இருந்தால்.. உலகில் உள்ள 75% மக்களை விட.. நீங்கள் வசதி பெற்றிருக்கிறீர்கள்!

வங்கியில் பணமிருந்தால்.. அவ்வாறு உள்ள 8% பணக்காரர்களுள்.. நீங்கள் ஒருவர்.

உலகில் உள்ள 80% மக்களுக்கு வங்கி கணக்கே இல்லை.

உன்னிடம் கணிப்பொறி இருந்தால்.. நீங்கள் அவ்வாறு வாய்ப்பு பெற்ற.. 1% மனிதர்களுள் ஒருவர்.

நினைத்த நேரத்தில், நினைத்த நபருடன் மொபைலில் பேச முடிந்தால். அவ்வாறு வாய்ப்பே இல்லாமல் இந்த உலகில் இருக்கும். 175 கோடி மக்களை விட நீங்கள் மேலானவர்.

நோயின்றி காலையில்.. புத்துணர்வுடன் எழுந்தால்.. அந்த வாய்ப்பற்று இரவு படுக்கையிலையே.. உயிர் துறந்த பலரை விட.. நீங்கள் பாக்கியசாலி.

பார்வையும்,, செவித் திறன்,, வாய் பேசாமை..



உள்ளிட்ட எந்த குறைபாடுகளும்.. இல்லாது இருந்தால்..

அவ்வாறு உள்ள மக்களை விட நீங்கள் நல்ல நிலையில் இருக்கிறீர்கள்!

போர்,பட்டினி, சிறைத்தண்டனை போன்ற சித்ரவதையில் சிக்காமல் இருந்தால், ஒரு அமைதியான வாழ்க்கை உங்களுக்கு அமைந்துள்ளது என்று அர்த்தம்.

பெற்றோரை பிரியாமல் அவர்களுடன் இருந்தால்.. நீங்கள் இளம் பிராயத்தின் துன்பத்தை அறியாதவரே!





# நீ சிரித்தால் தீபாவளி!



அரக்கோணம் டாக்டர் ஏபிஜே அப்துல் கலாம் கல்வி அறக்கட்டளை சார்பில் அதன் நிறுவனர் டாக்டர் ஜே.சுகந்தி வினோதினி அவர்கள் தீபாவளி அன்று அருகில் அமைந்துள்ள பார்வையற்றோர் இல்லம் சென்றார். அரக்கோணம் திருமதி ராஜ்குமார், திரு.பாண்டியன் அப்பு குட்டி, திரு .கெவின் மெனு ஆகியோருடன் பார்வையற்றோருடன் பட்டாசு வெடித்தும்,உடைகளை வழங்கியும் கொண்டாடினார். அங்குள்ள பார்வையற்றவர்களுக்கு ஆடைகள் வழங்கினார். அவர்களுடன் பட்டாசு வெடித்து தீபாவளி கொண்டாடினார்.


மித்ரா டாக்கீஸ்

**பண்டிகை நாட்களில் வெளியாகும் திரைப்படங்களுக்கு ரசிகர்கள் மத்தியில் தனி எதிர்பார்ப்புகள் உண்டு. அந்த வகையில், இந்த ஆண்டு தீபாவளி பண்டிகைக்கு சினிமாவில் நான்கு முன்னணி நடிகர்களின் திரைப்படங்கள் திரைக்கு வருகிறது.**

## அமரன்

ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் தயாரிப்பில், மறைந்த மேஜர் முகுந்த் வரதராஜனின் வாழ்க்கையை தழுவி அமரன் திரைப்படம் உருவாகியுள்ளது. ரங்கூன் திரைப்படத்தை இயக்கிய ராஜ்குமார் பெரியசாமி இப்படத்தை இயக்க, வழக்கமான தனது உடல் மொழியை மாற்றி ராணுவ வீரராகவே பல்வேறு கட்ட பயிற்சிகளை எடுத்து முகுந்த் வரதராஜனாக சிவகார்த்திகேயன் நடித்துள்ளார்.

சிறுவயதில் இருந்தே இந்திய ராணுவத்தில் சேர வேண்டும் என்கிற கனவுடன் இருக்கிறார் முகுந்த் வரதராஜன். கல்லூரியில் படிக்கும்போது தனக்கு ஜூனியரான இந்துவை காதலிக்கிறார். காதல் ஒரு பக்கம் இருந்தாலும் ராணுவத்தில் சேர வேண்டும் என்ற முனைப்போடு ராணுவ பயிற்சியில் முழுமூச்சாக ஈடுபட்டு வருகிறார். எப்படியோ பல போராட்டங்களுக்கு பின் இரு வீட்டார் சம்மதத்துடன் முகுந்த் இந்துவின் திருமணம் நடைபெறுகிறது.




ராணுவத்தில் முதலில் லெப்டினன்ட்டாக இணையும் முகுந்த், பின் கேப்டனாக பதவி ஏற்க, அதனை தொடர்ந்து 44 ராஷ்ட்ரிய ரைபிள்ஸ் சீட்டா கம்பெனியில் மேஜராக பொறுப்பேற்கிறார். ஜம்மு காஷ்மீரில் கிளிர்ச்சிக்கும், கொடூர தாக்குதல்களுக்கும் முக்கிய குற்றவாளியாக இருப்பவரை, முகுந்த் கொல்கிறார்.

அதன் பிறகு அவர் இடத்திற்கு வரும், உயிரிழந்த குற்றவாளியின் தம்பி, ஜம்முவில் இருக்கும் இந்திய ராணுவப்படையினரை வீழ்த்த திட்டம் தீட்டுகிறார். இவரது திட்டம் வெற்றி பெற்றதா? மேஜர் முகுந்த் எப்படி இறந்தார்? என்பதை அழுத்தமாகவும், ஆணித்தனமாகவும் காண்பித்திருக்கிறது அமரன் திரைப்படம்.

முகுந்த் வரதராஜன் கதாபாத்திரத்தில் மிகவும் அற்புதமான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார் சிவகார்த்திகேயன். படத்தின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை ராணுவ வீரரின் குணத்தை தன் உடல்மொழியில் சுமந்திருக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும்.

மறுபுறம் அவரை மிஞ்சும் அளவிற்கு அனைவரின் மனதிலும் இடம் பிடித்திருக்கிறார். இந்து கதாபாத்திரத்தில் நடித்த சாய் பல்லவி இந்து ரெபேக்கா வர்கீஸாக நடிக்கவில்லை, வாழ்ந்தே இருக்கிறார் என்றே சொல்லலாம்.

கர்னலாக நடித்த ராகுல் போஸ், விக்ரம் சிங்காக நடித்த புவன் அரோரா, உமைர் லதீப் ஆகியோர் தங்களுக்குக் கிடைத்த காட்சிகளை நேர்த்தியாக பயன்படுத்தியிருக்கின்றனர். ஒளிப்பதிவாளர் சிஎச். சாய் படத்திற்கு பெரிய பங்களிப்பைச் செய்திருக்கிறார். படத்தில் ஜி.வி. பிரகாஷ் குமார். பாடல்களும் சரி, பின்னணி இசையும் கலக்கி இருக்கிறார்.

## பிரதர்

எந்த ஒரு கதாபாத்திரம் கொடுத்தாலும், அந்த கதாபாத்திரமாகவே மாறி அனைவரையும் ரசிக்க வைப்பவர் நடிகர் ஜெயம் ரவி. இவர் நடிப்பில் நேற்று வெளிவந்த திரைப்படம் பிரதர். எம். ராஜேஷ் இயக்கத்தில் முதல் முறையாக ஜெயம் ரவி நடித்த இப்படத்தில்

அவருடன் இணைந்து பூமிகா, பிரியங்கா மோகன், நட்டி, விடிவி கணேஷ் ஆகியோர் நடித்திருந்தனர். ஜெயம் ரவி. இந்தக் கதைக்கு தன்னால் என்ன செய்ய முடியுமோ அதையெல்லாம் தாண்டி செய்திருக்கிறார். தன் அப்பாவிடம், அக்காவிடம், மாமாவிடம் அவர் பேசும்போது இப்படி ஒரு தம்பியாக அக்காவிடம் இருக்க வேண்டும் என உணர வைத்து கலங்க வைக்கிறார். இந்த திரைப்படத்தில் அக்காவாக நம் மனதில் இடம் பிடிக்கிறார் பூமிகா.

## லக்கி பாஸ்கர்

தனுஷின் வாத்தி படத்தை இயக்கிய தெலுங்கு இயக்குநர் வெங்கி அட்லூரி இயக்கத்தில் துல்கர் சல்மான், மீனாட்சி சவுத்ரி, ராம்கி, சச்சின் கடேக்கர் உள்ளிட்ட பலர் நடித்துள்ள லக்கி பாஸ்கர் திரைப்படம் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வெளியானது. 1992 ஸ்கேம் வெப்சீரிஸ், பிக்புல் உள்ளிட்ட படங்களில் ஏற்கனவே 1989 முதல் 1992 வரை ஹர்ஷத் மேத்தா நடத்திய பணமோசடி குறித்து பல படங்களும் வெப்சீரிஸ்களும் வெளியாகி விட்டன. அதே காலக்கட்டத்தில் நடைபெறும் மோசடி கதையாகவே இந்த படத்தை உருவாக்க நினைத்த இயக்குநர் பாஸ்கர் எனும் வங்கி கேஷியர் கதாபாத்திரத்தை துல்கர் சல்மானுக்கு கொடுத்து க்ரியேட்டிவ் லிபர்டியுடன் புகுந்து விளையாடியுள்ளார். 3 வடபாவ் வாங்கவே சிரமப்படும் கேஷியர் அவரை நம்பி காதலித்து வந்த சுமதி (மீனாட்சி சவுத்ரி) என சாமானிய வாழ்க்கை வாழ்ந்து வரும் நபர் ஒரு கட்டத்தில் மோசடி செய்து எப்படி கோடீஸ்வரர் ஆகிறார். அதன் பின்னர் அவர் வாழ்க்கையில் என்ன என்ன மாற்றங்கள் மற்றும் சிக்கல்கள் வருகின்றன என்பதை சிறப்பாக சொல்லியிருக்கிறார் இயக்குநர்.






## பிளடிபெக்கர்

தமிழ் சினிமா உலகில் பிரபலமான நடிகர்களில் ஒருவராக கவின் வளர்ந்து இருக்கிறார். தற்போது இவருடைய நடிப்பில் உருவாகி இருக்கும் படம் பிளடி பெக்கர். இந்த படத்தை இயக்குனர் நெல்சன் தயாரித்திருக்கிறார். இந்த படத்தை நெல்சனிடம் உதவி இயக்குனராக இருந்த சிவபாலன் முத்துகுமார் என்பவர் தான் இயக்கியிருக்கிறார். இந்த படத்தின் மூலம் தான் இவர் தமிழ் சினிமா உலகில் இயக்குனராக அறிமுகமாகி இருக்கிறார். இந்த படத்திற்கு ஜென்மார்ட்டின் இசையமைத்திருக்கிறார். இந்த படத்தில் ரெடின் கிங்ஸ்லி, மாருதி பிரகாஷ்ராஜ், சுனில் சுகாதா, அக்ஷயா ஹரிஹரன் உட்பட பல நடிகர்கள் நடித்திருக்கிறார்கள்.

படத்தில் கவின் பிச்சைக்காரனாக வாழ்ந்து வருகிறார். இவருக்கு எப்படியாவது மாளிகையில் வாழ வேண்டும் என்று ஆசை இருக்கிறது. இந்த சமயத்தில் நடிகர் ஒருவர் தன்னுடைய பங்களாவில் ஏழை எளியவர்களுக்கு அன்னதானம் செய்கிறார். அதில் கவினும் கலந்து கொள்கிறார். அப்போது அவருக்கு அந்த பங்களா வாழ்க்கை ரொம்ப பிடித்து விடுகிறது. இன்னொரு பக்கம் அந்த பங்களா உறவினர்களுக்கு இடையே சொத்து பிரச்சனை நடக்கிறது.இந்த பங்களாவிற்காக 5 வாரிசுகள் தனித்தனியாக சொத்துக்காக அடித்துக் கொள்கிறார்கள். உயிர் மூலம் நிறைய பங்குகளை பெற்ற அந்த மகன் மட்டும் காணாமல் போய்விடுகிறார். அந்த மகனாக நடிக்க கவினை நடிக்க வைக்க ஒரு குரூப் திட்டம் போடுகிறார்கள். அதற்கு குடும்ப வழக்கறிஞரும் உதவுகிறார். ஒரு கட்டத்தில் மற்றவர்களுக்கு கவின் நடிக்கிறான் என்பது தெரிய வந்து அனைவருமே சேர்ந்து கவினை தீர்த்துக்கட்டி சொத்தை தங்களுடைய வசமாக்க முடிவு செய்கிறார்கள்.

அந்த பணக்கார குடும்பத்தின் சதி திட்டத்திலிருந்து கவின் தப்பித்தாரா? சிக்கினாரா? இல்லை அவர்களுக்கெல்லாம் பதிலடி கொடுத்து உண்மையிலேயே அந்த மாளிகையை ஆண்டாரா? என்பது தான் படத்தின் மீதி கதை.




# சினிமா பத்திரிகையாளர் சங்க ஆண்டு விழா!

70 ஆண்டுகள் பாரம்பரியம் மிக்க சினிமா பத்திரிகையாளர் சங்கத்தின் 'தீபாவளி மலர் 2024 ' வெளியீடு, உறுப்பினர்களுக்கான தீபாவளி பரிசு வழங்குதல் ... மற்றும் சங்கத்தின் 70ம் ஆண்டு நிறைவு விழா ஆகிய மூன்று விழாக்களையும் முப்பெரும் விழாவாக நேற்று , அக்டோபர் 28 ஆம் தேதி திங்கட்கிழமை சென்னை பிரசாத் லேப் வளாகத்தில் கோலாகலமாக கொண்டாடினர்

இந்த நிகழ்ச்சியில் திரு.நக்கீரன் கோபால், மூத்த பத்திரிகையாளர் திரு.'மக்கள் குரல்' ராம்ஜி, நடிகர் திரு. 'முருகா ' அசோக், நடிகை செல்வி.அனு கிருஷ்ணா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துக் கொண்டு, சினிமா பத்திரிகையாளர் சங்கத்தின் தீபாவளி மலரை வெளியிட்டு, சினிமா பத்திரிகையாளர்களுக்கு தீபாவளி பரிசுகளை வழங்கினார்கள்.

சினிமா பத்திரிகையாளர் சங்கத்தின் செயலாளர் ஆர்.எஸ்.கார்த்திக் வரவேற்புரை நிகழ்த்தி பேசுகையில், "நான் இத்துறைக்கு வந்து 32 ஆண்டுகள் ஆகிறது. பல தின , வார , மாத பத்திரிகைகளில் நான் சினிமா பத்திரிகையாளராக பணியாற்றியிருக்கிறேன். தற்போதும் பணியாற்றி வருகிறேன். ஆனால் , இதுவரை அரசு வழங்கும் அடையாள அட்டையையோ , பத்திரிகையாளர்களுக்கான சலுகைகளையோ நான் பெற்றது இல்லை. இங்கு வந்திருக்கும் பல சினிமா பத்திரிகையாளர்களின் நிலையும் அதுதான். எங்களின் நிலையை உணர்ந்து அண்ணன் திரு. நக்கீரன் கோபால் அவர்கள் தற்போது இருக்கும் அரசாங்கத்திடம் நம் போன்ற சினிமா பத்திரிகையாளர்களுக்காகவும் பேச வேண்டும் என்பதற்காக தான் இந்த முப்பெரும் விழாவிற்கு தலைமை தாங்க அவரை அழைத்திருக்கிறோம்.

'பத்திரிகையாளர்களின் போர்வாள்' திரு. நக்கீரன் கோபால். அவர்கள் இந்த நிகழ்ச்சிக்கு தலைமையேற்க வந்திருப்பது எங்களுக்கு மகிழ்ச்சி.

70 ஆண்டுகள் பாரம்பரியம் மிக்க நம் சங்கம் உறுப்பினர்களுக்கு அவ்வப்போது பல நல்ல விஷயங்களை செய்து வருகிறது. தீபாவளி மலர் மூலம் கிடக்கும் விளம்பர வருவாய் கொண்டு சங்க உறுப்பினர்களுக்கு தீபாவளி பரிசு வழங்கப்படுகிறது. இந்த நேரத்தில் ஒவ்வொரு ஆண்டும் நம் மலருக்கு பெருவாரியாக தங்களது தீபாவளி வாழ்த்து விளம்பரங்கள் – தங்கள் பட விளம்பரங்கள் ... கொடுத்து ஆதரவளித்து வரும் 'மக்கள் செல்வன்' திரு.விஜய் சேதுபதி, திரு.சிவகார்த்திகேயன், திரு.சூர்யா, திரு.கார்த்தி சிவக்குமார் , திரு.ஹம்சவிர்தன் தயாரிப்பாளர் திரு. கலைப்புலி தாணு , திரு ஷி.ஸி. பிரபு மற்றும் இன்னும் பிற தயாரிப்பாளர்கள் , இயக்குநர்கள் , நட்சத்திரங்கள் , ஆகியோருக்கும் இந்த ஆண்டு முதல் நமக்கு வாழ்த்து விளம்பர ஒத்துழைப்பு தரத்தொடங்கியிருக்கும் நடிகர் திரு.ஜெயம் ரவி, 'டர்மரிக் ' தயாரிப்பு நிறுவனத்தின் திரு.மகேந்திரன் மற்றும் திரு.டிஸ்னி – தேசியத் தலைவர் திரு.பஷீர் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.



# வெற்றி மீது எப்போதும் ஆசை கொள்ளுங்கள்!

கற்றுக் கொண்டே இருங்கள்.

செல்வம், புகழ் இருந்தால் வெளியுலகில் வேண்டுமானால் உற்சாகமாக இருப்பது போல் காட்டிக் கொள்ளலாம்.

ஆனால், தூய்மையான மனம் இருந்தால் தான் நிம்மதி இருக்கும்.

உண்மையைப் பேசுவதில் ஒரு சவுகரியம் உண்டு, ஏனென்றால் பேசியதை நினைவில் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை...

ஓர் இளம் கேலிச்சித்திரக்காரரை திறமை இல்லாதவர் என்று பல செய்தித்தாள் ஆசிரியர்கள் புறக்கணித்துவிட்டனர்.

ஒரு தொழிலதிபர் ஒருவர் சில கேலிச்சித்திரங்களை வரைய அவரை வாடகைக்கு அமர்த்திக் கொண்டார்.

ஓவியர், ஊருக்கு ஒதுக்குபுறமாக இருந்த எலிகள் அதிக அளவில் நடமாடும் ஒரு வாடகை கொட்டகையில் வேலை செய்து கொண்டிருந்தார்.

ஒரு நாள், ஒரு சிறிய எலி அங்கும் இங்கும் துறுதுறுவென ஓடிக் கொண்டிருந்ததைப் பார்த்தவுடன் அவருக்குப் பொறி தட்டியது. அந்த எலியை வைத்து கேலிச்சித்திரம் வரைய ஆரம்பித்தார். அதுவே மிக்கி மௌஸின் தொடக்கமாகும். அந்த ஓவியர் தான் வால்ட் டிஸ்னி.

வெற்றி பெறுபவர்கள் எப்போதும் மிகச் சிறந்த காரியங்களைச் செய்வதில்லை. ஆனால் அவர்கள் சாதாரண வேலைகளைக் கூட மிகச் சிறந்த முறையில் செய்கின்றனர்.

வெற்றியின் மீது எப்போது ஆவல் கொண்டிருங்கள்.

உங்கள் உறுதியான உள்ளுணர்வுகளை நம்புங்கள்.

உங்களைப் பற்றி நீங்கள் செய்த காரியங்கள்தான் பேசும். உங்களின் கனவு வெற்றியடையாது, முட்டாள்தனமானது என்று யார் கூறினாலும் ஏற்றுக்கொள்ளாதீர்கள்.

உங்களை வளர்த்துக்கொள்ள கற்றுக்கொண்டே இருங்கள். ஏதேனும் ஒரு காரியங்களில் கவனத்தைக் குவியுங்கள். உங்கள் கனவை உயிர்ப்புடன் வைத்திருங்கள்.

வெற்றிக்கு ஒரு முக்கியமான திறவுகோல் தன்னம்பிக்கை. தன்னம்பிக்கைக்கு ஒரு முக்கியமான திறவுகோல் தயாராவது ஆகும்.

காலம் கடந்து எடுக்கும் முடிவினால், எந்த பயனும் இல்லை!

# செய்யும் செயலே வெற்றிக்கான தடம்!

தயக்கம் உதறு. சிற்பியின் கரங்கள்,சிவந்து இருப்பதை நினைத்து,சிற்பங்கள் என்றும் வருந்துவதில்லை, வாழ்க்கையும் அதுபோல, துன்பங்களை நினைத்து, உனக்கான இன்பங்களைத் தொலைக்காதே.

வாழ்க்கை கடினமில்லை...வாழ்வதும் கடினம் இல்லை. ஆனால் நம்மை சுற்றி உள்ளவர்களை சமாளிப்பது தான் மிகவும் கடினமாகும்.

அடிக்கடி மன்னிக்க கற்றுக் கொள்ளுங்கள். ஆனால் நம்பிக்கை வைப்பதை மட்டும் ஒரு முறையோடு நிறுத்திக் கொள்ளுங்கள்.

இன்று உன்னால் கூடிய மட்டும் நன்றாய்ச் செய், நாளை அதனினும் நன்றாய்ச் செய்யும் ஆற்றலைப் பெறுவாய்.

தனது கடமையில் எவன் ஒருவன் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்கிறானோ அவனே வாழ்வில் பூரணத்துவம் பெற்று, அதி உன்னத நிலையை அடைகிறான்" என்கிறார் கீதையிலே கண்ணன்.

கடமையைச் செம்மையாய் நிறைவேற்றுவதன் மூலமே ஒருவன் உயரிய நிலையை அடையமுடியும். இதனை வலியுறுத்தும் வகையிலேயே நமது நாட்டில் வீரகாவியங்களும் அறநூல்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த உலக வாழ்க்கையில் எத்தனையோ காரியங்களை நாம் செய்கிறோம். அந்தச் செயல்கள் மூலம் நன்மைகளும் விளைகின்றன.

சில நேரங்களில் தீங்குகளும் உருவாகின்றன. ஆனால் ஒருவன் கடமையாற்றுகின்றபோது நன்மை மட்டுமே அதன் விளைவாக இருக்கும். தீமைக்கோ துன்பத்திற்கோ அங்கு இடமில்லை.

வாழ்வில் எதிர்ப்படும் சவால்களைத் துணிவோடு எதிர்கொண்டு லட்சியத்திலிருந்து சிறிதும் வழுவாமல் கடமையை நிறைவேற்றும் ஒருவருக்கு வெற்றி எளிதில் கைகூடி விடுகிறது.

சாதனையாளர்களாய் கடமையில் கண்ணாயிருந்து



பரிணமித்த பெருமைக் குரியவர்களை காலம் தனது ஏடுகளில் கவனமாய்க் குறித்து வைத்திருக்கிறது. அந்தச் சாதனையாளர்களின் சரித்திரத்தைச் சற்று புரட்டிப் பார்த்தால் கடமை தவறாமல் காரியம் ஆற்றுதலே உறுதியான வெற்றிக்கான வலுவான வழித்தடம் என்பது புலனாகும்.

கடமை தவறுவோரும், பிறரைக் கடமையிலிருந்து தவறச் செய்வோரும் மலிந்துவிட்ட இன்றைய நிலையில் நம்மை நாம் சுயமதிப்பீடு செய்து கொண்டு, நமது செயல்பாடுகளைப் புணரமைத்துக் கொள்ளவேண்டியது அவசியம். கடமையில் உறுதியான பற்றுகொண்ட மக்களே அதிவேக வளர்ச்சியைப் பெற்றுள்ளனர் என்பதே உலகம் நமக்கு உணர்த்தும் பாடமாகும்.

*நகரும் முள் தான் மணியைக் காட்டும்*

*தேய்ந்தப் பின் தான் நிலா முழுமை ஆகும்*

*காயந்த சருகும் உரமாய்ப் போகும்*

*தயக்கம் உதறு காலம் மாறும்*

அன்பை மட்டுமே கடன் கொடுங்கள்.

அது மட்டுமே அதிக வட்டியுடன் உங்களுக்குத் திரும்பக் கிடைக்கும்.

# உங்களிடம் உள்ளதை உயர்வாகவே நினையுங்கள்!



துன்பம் உங்களை நெருங்காது. லட்சியம் இருக்கும் இடத்தில் அலட்சியம் இருக்காது. பணத்திலேயே குறியாக இருக்கும் மனிதனுக்கு அன்பையே அடிப்படையாக கொண்டிருக்கும் ஒரு மனிதனை புரிந்து கொள்ள முடியாது.

எந்த மிருகமும் அன்பை பெற்று கொண்டு துரோகத்தை வெளிப்படுத்துவதில்லை. மனிதனைத் தவிர.

யாரிடம் யார் வெல்கிறோம் என்பதிலில்லை. யாரால் யார் மகிழ்விக்கப்படுகின்றோம் என்பதில் ஒளிந்துள்ளது உறவின் ஆழம்.

நீங்கள் எப்போது உயர்ந்தவர் ஆகுகிறீர்கள் என்றால், உங்களை விட சிறியவர் என்றாலும், மரியாதையோடு அவர்களுடன் பழகும் போது தான்.

நடக்கும் முன்னே நல்லதே நடக்கும் என்று நினைத்துக்கொள்ளுங்கள்.



நடந்த பின்னே, நடந்ததும் நல்லதற்கே என்று நினைத்துக்கொண்டால் வாழ்வில் பிரச்சினைகளுக்கு இடம் இருக்காது.

நீங்கள் விதைக்கும் எண்ணங்கள் உங்களிடமே திரும்பி வந்து சேரும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

நன்மை, தீமை, அறம், உண்மை, பொய், ஆக்கம், கேடு, அன்பு, சினம். எப்படிப்பட்ட எண்ணங்களை விதைக்க வேண்டும் என்பதை நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

உங்களிடம் இருப்பதை உயர்வானதாக நினையுங்கள்.

இல்லாத ஒன்றினை மலிவானதாக நினையுங்கள். துன்பம் எப்போதும் உங்களை நெருங்காது.

பணம் மனிதனை ஆட்சி செய்ய அனுமதிக்க கூடாது. நற்பண்பே மனிதனை ஆட்சி செய்ய வேண்டும். வெற்றி பெற்ற மனிதர்கள் மற்றவர்களின் செயல்களைப்பற்றி கவலைப்பட மாட்டார்கள்.





**ரா**க்கம்மா தோளைத் தட்டு!


புது மேளத்தில் தாளம் தட்டு!

என்று மேஜை மீது தாளம் போட்டு பாட்டு பாடினார் கபாலிகான். என்னங்க பாட்ட மாத்தி போடுறீங்க!

***மாத்தி போட்டா என்ன தப்பு! இதுவும் பாட்டு தானே?***

என்று கபாலிகான் சொன்னவுடன் இன்று பாட்டை வைத்து செய்தியை சொல்லப்போகிறார் என்பதை உணர்ந்து கொண்டோம். ஆகையால் எதையும் கேட்காமல் அமைதியாக இருந்த போது அவரே தொடர்ந்து, அரசியலும் பாடலை வைத்து பரபரப்பை உருவாக்கி இருக்கிறது.

***ஓஹோ!***




பொதிகைத் தொலைக்காட்சியில்தமிழ் தாய் வாழ்த்து பாடும்போது அதில் ஒரு வரி விடப்பட்டது.

கவர்னர் கலந்து கொண்டதால் அந்த வரி விடப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து தி.மு.க உள்ளிட்ட கட்சிகள் கண்டனம் தெரிவித்தனர். திராவிட நல் திருநாடு என்ற வார்த்தையை விட்டதை

தி.மு.க சொன்னதால், திராவிடத்துக்கு எதிர்ப்பாக தங்கள் அரசியல் செய்தோம் என்பதை காண்பிக்க சீமான் கட்சியைச் சார்ந்த சாட்டை துரைமுருகன் தமிழர் நாள் திருநாடு என்று வரி சேர்த்தது நீராருங் கடலுடுத்த என்ற பாடலை இணையத்தில் பதிவிட்டார். அது எதிர்பார்த்த பரபரப்பு கிடைக்காத காரணத்தால் அடுத்த அஸ்திரத்தை சீமான் கையில் எடுத்தார்.

**என்னது?**

தான் கலந்து கொண்ட ஒரு விழாவில் பாரதிதாசன் பாடிய தமிழ் தாய் வாழ்த்து போட்டு இதுதான் தமிழ் தாய் வாழ்த்து நான் ஆட்சிக்கு வந்தால் பழைய தமிழ் பாட்டை எடுத்துவிட்டு இதை போடுவேன்" என்று சொன்னார். அதை சொல்லும்போது லேசாக சிரித்துக் கொண்டே சொன்னது தெரிந்தது.

சீமான் நீண்ட நாட்களுக்குப் பிறகு ஆவேசமாக பேசி இருக்கிறார்.

**என்ன காரணம்?**

எல்லாம் நினைத்தது ஒன்று ...நடந்தது ஒன்று என்பதால் தான்!...

**என்ன நினைத்தார்?**

ஆரம்பத்தில் இருந்து விஜய் தனது தம்பி என்றும் அவரது பாதையும் எனது பாதையும் ஒன்று என்றும் சொல்லி வந்தவர் விக்கிரவாண்டி மாநாடு நடந்த பிறகு மாறிவிட்டது.

**சீமான் பேச்சு சிறப்பாக இருந்ததே?**

ஆமாம் அந்த பேச்சு வழக்கத்துக்கு மாறாக தி.மு.க உள்ளுக்குள் ரசித்தது.





**என்ன சொல்றீங்க?**

அவருடைய பெரம்பூர் கூட்டத்தின் பேச்சு, செய்தியாளர் பேட்டி ஆகியவை இரண்டும் விஜய்க்கும் விஜய் பின்னாடி இயக்குவதாக சொல்லப்படும் காங்கிரஸ் மீதும் வைத்த விமர்சனம் பிடித்திருந்தது. திருமாவளவன் பற்றி அதிகமாக பேசவில்லை.

**சரி!**

இனி விஜய் அரசியலில் சீமான் பார்த்துக் கொள்வார் என்று சந்தோசப்படுகிறார்கள்.

**பி.ஜே.பி, அ.தி.மு.க என்ன நினைக் கிறார்கள்?**

அவர்களுக்கும் உள்ளுக்குள் சந்தோசம் திமுகவை எதிர்க்க தங்களுக்கு கிடைத்த இன்னொரு ஆயுதமாக விஜய் பயன்படுத்துகிறார் என்பதில் மகிழ்ச்சி!

**அப்ப அரசியல் களம் சூடு பிடித்திருக்கிறது என்று சொல்லுங்க!**

தீபாவளி பட்டாசை விட வெடிச்சத்தம் அரசியல் அதிகமாக இருந்தது அண்ணாமலை வெளிநாட்டிலிருந்து திரும்பியதும் அந்த சத்தம் அதிகமாகும். அடுத்த மாதம் பார்ப்போம் என்று சொல்லி தீபாவளிக்காக வைத்திருந்த ஸ்வீட் டப்பாவை தன் கையால் எவ்வளவு பிடிக்குமோ அதை தூக்கி எடுத்துக் கொண்டு சென்றார் கபாலிகான்.



# சரியான கேள்விகளை கேட்பவனே அறிவாளி!

எதுவும் கையில் கிடைப்பதற்கு முன் கனவு காண்பதில் ஒன்றும் தவறில்லையே.

ஏனென்றால் இதுவும் நமது கடின உழைப்பிற்கு ஒரு கருவியாக அமையலாம்.

இங்கு கையில் இருப்பவையே நிரந்தரம் இல்லை, என்று கவலை படுவதைவிட, கஷ்டபட்டாவது கனவினை நிறைவேற்ற முயற்ச்சி செய்யலாமே...

"அறிவாளி என்பவன் சரியான பதில்களை வைத்திருப்பவன் அல்ல. சரியான கேள்விகளை வைத்திருப்பவனே அறிவாளி "

-லெவிஸ்ட்ராஸ்

காயங்கள் எதுவும்
கனவுகளுக்கில்லை
வலிகளெல்லாம்
நினைவுகளுக்கு மட்டுமே.

குறள்:1209

*விளியுமென் இன்னுயிர் வேறல்லம் என்பார்*
*அளியின்மை ஆற்ற நினைந்து.*

``நாம் ஒருவரே; வேறு வேறு அல்லர்'' எனக்கூறிய காதலர் இரக்கமில்லாதவராக என்னைப் பிரிந்து சென்றுள்ளதை நினைத்து வருந்துவதால் என்னுயிர் கொஞ்சம் கொஞ்சமாகப் போய்க் கொண்டிருக்கிறது

வாழ்க்கையில நாம யாருக்கு முதலிடம் கொடுக்கிறோமோ... அவங்கதான் நம்மள கடைசி இடத்துல நிறுத்தி வைப்பாங்க...


*அதுதான் வாழ்க்கை.!*

*ரசிக்க ரசிக்க*
*தீராத ஆசை*
*சட்டென*
*தீர்ந்துவிடும்*
*ரசனைகள்*
*தீரும்போது*
*மாறும்போது*
*சில நேரங்களில்*
*சில இடங்களில்...*

*#தடைகள் பல வரலாம்*
*தட்டிப்பறிக்க கூட்டமும் சில வரலாம்*
*எதை கண்டும் அஞ்சாதே*
*துணிந்து நில்*
*முன் வைத்த காலை பின் வைக்காதே*
*நீ எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும்*
*வெற்றியின் படிகள் தான்..!!!*
*தடை அதை உடை!*

ஒருவருடைய வாய்ப்பையும் முன்னேற்றத்தையும் எவராலும் எதனாலும் தடுக்க எப்பொழுதும் இயலாது தொடர்ந்து நம் பணியை செய்வோம் அது நம்மை முன் நிறுத்தும்! நற்குணங்களை தகுதியாக்கிக் கொண்டு நான் இப்படித்தான் என்று தலை நிமிர்ந்து நில்லுங்கள் புரிந்து கொள்பவர்கள் புரிந்து வரட்டும் புரியாதவர்கள் விலகி செல்லட்டும்..

# எந்த சூழ்நிலையிலும் சிறந்த பதில் புன்னகை



**அ**லையாய் இரு கரையாய் இரு.

சாக்கடையில் கல்லெறிந்தால் நம் மேல் படும் என ஒதுங்கிச் செல்வதை. சாக்கடை தனக்கான பெருமையாய் நினைத்துக் கொள்கிறது.

நேர்மைக்கு பாராட்டு தேவை இல்லை. அங்கீகாரம் தான் தேவை.

ஆறுதலாக பேசுகிறார்கள் என்பதற்காக அத்தனையும் சொல்லி விடாதீர்கள்.

அவர்களின் கவனம் உங்கள் முழு கதையும் தெரிந்து கொள்வதாகக் கூட இருக்கலாம். எல்லாவற்றையும் எல்லாரிடமும் சொல்லாதீர்கள். சிலரிடம் கேட்பதற்கு காதுகள் இருக்கும், புரிந்து கொள்வதற்கு மனங்கள் இருக்காது.

தேவையில்லாத கேள்விக்கு தெளிவான விடை "மௌனம்" எந்த சூழ்நிலையிலும் சிறந்த பதில் புன்னகை.

உங்கள் மதிப்பு தெரியாதவர்களிடம் மௌனமாக கடந்து செல்லுங்கள்.

மௌனம் அமைதியின் அடையாளம் மட்டும் அல்ல. மற்றவர்களின் உள்ளத்தில் உரசி உறவாடும் ஆயுதமும் கூட.

விடாமுயற்சியா? உறுதியா?

கடலோரம்... அலைகள் கரையில் மோதிச் சிதறும் காட்சி. குருவும், அவரது சீடர்களும் காண்கிறார்கள்.

முதலாவது சீடனைப் பார்த்து குரு கேட்டார், 'உனக்கு என்ன தெரிகிறது?"

அதற்கு முதல் சீடன் 'திரும்பத் திரும்ப வந்து மோதும் அலைகளில் விடாமுயற்சி தெரிகிறது" என்றான்.

அடுத்த சீடனைக் கேட்ட போது அவன் சொன்னான், 'துன்பங்கள் தொடர்ந்து வந்தாலும் கரையைப் போல் உறுதியாக நின்றால் சிதறிப் போகும்" என்று.

குரு சொன்னார், 'சில நேரங்களில் அலைகளாய் இரு... சில நேரங்களில் கரையாய் இரு."

கிடைக்கும் போது பயன்படுத்தி விடு. இருக்கும் போது அனுபவித்து விடு நினைத்தவுடன் செய்து முடித்து விடு வாழ்க்கை ஒருமுறை தான்.

தோல்வி என்ற ஒன்று இல்லாவிடில், படிப்பினை என்ற ஒன்று இல்லாமலே போயிருக்கும்.

வாழ்க்கை என்பது பெருந்தவம் மகிழ்ச்சி என்பது அதில் வரம்.

மனதில் உறுதியையும் வெளியில் சரியான சூழ்நிலையையும் உருவாக்கினால், ஆசைப்பட்டதைத் தள்ளிப் போடாமல் செய்து முடிக்கும் பலம் தானாக வந்து விடும்.




# WOMEN AT THEIR 30s

30 is a very significant, middle age for every woman. Certain things change when you hit 30. It is very crucial when it comes to face all the important aspects of your life like career, marriage, family and health. Mindset changes as you realize how much you haven't achieved in life. Small talks no longer excite you. Often you want to be all by yourself. You want to save more than spend. You don't take life for granted, because by now you have probably experienced some hard times that makes you appreciate what you have. You realize that your parents were right all along.

Friendship: Most of your friends have got married, migrated or just too busy. You will probably start making a few new friends that fit in your current situation. You must have realized the difference between quality/ quantity. You have fewer friends and dropped toxic people in your life. You no longer care what others think of you.

Source of pleasure: At 30, your source of pleasure changes, family begin to make more sense to you than friends. Life is more stable and relaxed now. You know that the most important relationship you are going to have is with yourself. So you being to be more kind to yourself. Selfcare is the best care. Long gone are the days where you feel the need to go out on a Saturday night, impress people / spend money on things you don't even need. You are wiser, more mature, have a bit more money and make fewer mistakes than you did in your 20s.

Career: 30 is not old, its just a start. With every decade we are acquiring fresh knowledge, skills and strength to deal with next phase of life. It's never too late to start something new. It's always better than never and better than the regret of never having tried. We might be considering career choices whether they are making long term happy decision. You follow your passion, not the crowd. We only have one chance in this life. If you aren't following what you love, the what are you doing? You like who you are becoming and that's all matters. Society lies to the women, and tells them to focus on their career and tells they can always figure out family and children later in life.

Health: By 30, you begin to get more focused on your health. After years of fast food, binge drinking and no exercise you realize that your health equals your wealth. So, you begin to take

it seriously. Metabolism tends to slow down in 30s. Women may notice several changes in body composition and fat distribution, particularly around the abdomen. Regular exercise and balanced diet can help maintain a healthy weight and supports overall wellbeing.

Skin changes: - women may notice changes in their skin. Collagen production decreases, leading to loss of elasticity and appearances of fine lines and wrinkles in the skin. Skin becomes drier and more prone to pigmentation changes. Proper care such as using the right and suitable face creams, sunscreen to prevent skin damage and hydration helps maintain skin health.

Bone health: Women at 30s should pay attention to their bone health. Bone density reaches its peak. Adequate calcium intake, maintaining a healthy lifestyle can help support bones.

Changes in breast tissue: Breast may feel more dense or lumpy, regular breast self-exams and mammograms recommended by healthcare professionals are important for early detection of any abnormalities. Breast care include Usage of essential (fenugreek /flaxseed) oils to massage the breast regularly, and chest exercises will help.

It is recommended to go for a master checkup in regular intervals. As you turn 30, the best gift you could give yourself is a master checkup for the body and a counseling for your mind for a better decision making and clarity to deal with life in coming decades.

Conclusion: It is hard to ignore the fact that women have historically been worried about turning 30. But 20s will come to an end anyway and we should learn to face it with more maturity. You are another decade ahead to enjoy the roller coaster ride that life is going to offer you. It is up to each individual to lead it the way they want. By 30 we must have experienced major exciting moments in life. Now let's cut down distractions and be more focused on personal goals and success as our mind must be more stable now.




**N.RANJANI**


B.Sc (Computer Science)

THE NILGIRILS- 643213

Email: ranjnagaraj@gmail.com


# Turbulent situation

- prof.E.S.Jambulingam



The world is in a turbulent situation sporadically. Israel wants to destroy Lebanon and Iran in the pretext of Islamic terrorism. To protect Lebanon,Iran wants to destroy Israel. US,the most powerful country in the world keeps silence. Ukraine and Russia are locked to a conflict and Russia is bombing Ukraine,killing innocent people and children indiscriminately. Islamic countries are in the receiving end. UN is weak and helpless.It exists only on paper.Our Honourable Prime Minister tried for a truce by visiting Ukraine but nothing happened.

In the meantime,a thaw at Ladakh between India and China is likely.I really appreciate our diplomats for their diplomacy. This is significant because Ladakh is a place of strategic importance as it has common border with Pakistan and China with whom we have no good relationship.But China is trying to intrude into Arunachal Pradesh by constructing barrages on the border. Occasionally internecine battle takes place between our soldiers and Chinese soldiers.

Worldwar will not happen for certain but nuclear weapons may be used destroying some pockets like Hiroshima and Nagasaki. Total destruction will not happen.God alone can do it when mankind crosses it's limits and at an appropriate time.In the meantime,let us celebrate pollution free Deepawali.Wish my readers a very happy Deepawali.

# இன்றைய இளைஞர்களின் எதிர்காலம்?



பயமாக இருக்கிறது... இன்றைய தலைமுறையினரின் போக்கு.

- பிடித்த ஒரே பொருள் செல்ஃபோன்
- படிக்காமல் பாஸ் ஆக வேண்டும்.
- கஷ்டப்படாமல் வேலை கிடைக்க வேண்டும்...
- யாருக்குமே மரியாதை தரக்கூடாது..
- தனக்கு தெரியாத விஷயம் எதுவுமே இல்லை என்ற மனநிலை...
- எல்லாமே உடனே கிடைக்க வேண்டும்..
- காசுக்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாம்...
- சினிமா, கிரிக்கெட், செல்ஃபோன் இவைதான் உலகம்..
- பெண்கள் மீது மரியாதையே இல்லை..
- ஆசிரியர்கள், மூத்தோர்கள் எல்லாம் புழு பூச்சி மாதிரி...
- வரலாறு, பண்பாடு, கலை, இலக்கியம், அரசியல் குறித்த அடிப்படை புரிதல்கள் கூட இல்லை..
- ஒரு பேங்க் செலான் கூட நிரப்பத் தெரியாது..
- ஒரு வரி கூட வாசிப்பதில்லை..
- தப்பில்லாமல் தமிழோ, ஆங்கிலமோ எழுதவும், பேசவும் வராது...
- ஒரு விஷயத்தை கோர்வையாகச் சொல்ல வராது..
- வீதியில் நின்று விஷம் குடித்துக் கொண்டிருந்தாலும் அதையும் செல்பி எடுத்து போட வேண்டும்..
- பள்ளிச் சீருடையுடன் கூட டாஸ்மாக் போகிற அளவுக்கு தைரியம்..
- சின்ன வயசிலேயே வாயைத் திறந்தாலே கெட்ட வார்த்தை..
- எப்போதும் ஏதாவது ஒரு போதையில் தன்னை மூழ்கடித்துக் கொள்ள விரும்புகிற மனநிலை.. எதிலும் நிரந்தரமாக நிலை கொள்ளாத அலைபாயும் மனம்..
- ஜட்டி தெரிய பேண்ட் போட்டு, காண்டாமிருகம் மாதிரி முடிவெட்டி, எவரையும் கண்களைப் பார்த்து பேச முடியாமல் விநோதமாக வெறித்த பார்வையுடன் நடப்பது....
- இந்த அபாயத்தை சமூகம் இன்னும் முழுமையாக உணரவில்லை..
- பள்ளி ஆசிரியர்களுக்கும் ஓரளவுதான் தெரியும்..
- பெற்றோர்களின் அளவுக்கு மீறிய செல்லம்தான் சகலத்துக்கும் காரணம்..
- தங்களை அறியாமல் அவர்கள் இவர்களின் அனைத்து அடாவடிகளுக்கும் துணை போகிறார்கள்... அவர்கள் பார்க்கிற பிள்ளைகளில்லை இவர்கள்....
- இவர்கள் உள்ளுக்குள் வேறொரு ஜோம்பியாக வளர்ந்து கொண்டிருக்கிறார்கள்..
- பள்ளியில் படிக்கிற போது அவன் தன்னை முழுமையாக வெளிப்படுத்துவதில்லை..
- இவர்களுக்கும் அந்த இரு தலைமுறையினருக்கும் மலையளவு வித்தியாசம்..
- மேற்சொன்னவை ஏதோ ஆண் பிள்ளைகளுக்கு மட்டும் என்று என்ன வேண்டாம். இது இருபாலருக்கும் பொருந்தும்
- காலம்காலமாக மூத்தோர் இளையோர் மீது வைக்கிற குற்றச்சாட்டாக எண்ணிவிடாதீர்கள்
- கடந்த பல்லாயிரம் வருடங்களில் இப்படி ஒரு ரசனை கெட்ட, சுய சிந்தனையற்ற, சோம்பலும் அலட்சியமும் கொண்ட தலைமுறையை உலகம் சந்திக்கவே இல்லை.

மித்ரா கிட்சன்

# ஜில் ஜில் ஜிகர்தண்டா







**தேவையான பொருட்கள்:** பால்- $7_{1/2}$ லிட்டர் (Full fat milk), பால்கோவா-1 1/2கிலோ, சர்க்கரை_ 2 kg, ஐஸ்கிரீம் Any flavour, நன்னாரி சர்பத், பாதாம் பிசின்.

**செய்முறை :** முதலில் பாதாம் பிசின் கொஞ்சம் எடுத்து முன்னாடி நாள் இரவே ஊறவைத்து கொள்ளவும். அடுத்தபடியாக ஒரு அடி கனமான பெரிய பாத்திரத்தில் 5 லிட்டர் பாலை தண்ணீர் சேர்க்காமல் ஊற்றி நன்றாக காய்ச்சவும்.பிறகு அந்தப் பாலுடன் $1_{1/2}$ கிலோ பால்கோவா மற்றும் 1 கிலோ சர்க்கரை சேர்த்து மிதமான சூட்டில் காய்ச்சவும்.பால் கோவாவும் , சர்க்கரையும் கரைந்த பின்பு அந்த பாலை எடுத்து திகூஷீவீபீமீ ல் வைக்கவும்.பிறகு அதே பாத்திரத்தில் இரண்டரை லிட்டர் பாலை ஊற்றி தண்ணீர் சேர்க்காமல் மிதமான சூட்டில் சுண்டக் காய்ச்சவும். இரண்டரை லிட்டர் பால் காய்ந்து சுண்டிய பின்பு வெறும் பாலாடையாக வரும் வரை காய்ச்சவும். அதன்பின் மற்றொரு பாத்திரத்தில் 1 கிலோ சர்க்கரை சேர்த்து சிகிஸிகிவிணிலி மாதிரி ஆகும் வரை காய்ச்சவும்.

இப்பொழுது பிரிட்ஜில் இருக்கும் பாலை வெளியே எடுக்கவும். ஜில்லென்று இருக்கும் அந்த பாலில் கொஞ்சம் சிகிஸிகிவிணிலி சேர்த்து நன்றாக கலக்கவும். ஒரு கண்ணாடி டம்ளர் எடுத்துக் கொள்ளவும். அந்தக் கண்ணாடி டம்ளரில் நாம் ஊறவைத்த பாதாம் பிசின் இரண்டு ஸ்பூன் சேர்க்கவும். பிறகு ஜில்லென்று இருக்கும் பாலை கொஞ்சம் சேர்க்கவும். பிறகு அதன் மேல் பாலாடை கொஞ்சம் சேர்க்கவும். அதன்பிறகு கொஞ்சம் நன்னாரி சர்பத் சேர்க்கவும். பிறகு அதன் மேல் கொஞ்சம் CARAMEL சேர்க்கவும். அதன் பிறகு அதன் மேல் ஐஸ்கிரீம் கொஞ்சம் சேர்த்துக் கொள்ளவும்.

கடைசியாக மேலே கொஞ்சம் CARAMEL சேர்த்துக் கொள்ளவும். ஆஹா ஆஹா இப்பொழுது அனைவருக்கும் பிடித்த சூப்பரான, அட்டகாசமான,டேஸ்ட்டான, நாவை விட்டு நீங்காத சுவையுடன் அசத்தலான ஜில்ஜில் ஜிகர்தண்டா ரெடி.



**S.கவிதா**
**சிட்லபாக்கம்**

# மூன்று நோய்களைப் போக்கும் பூண்டு பால்



மூட்டு வலி, சர்க்கரை, உயர் ரத்த அழுத்தம். இந்த மூன்று நோய்களுக்கும் ஒரே மருந்து.

**தேவையான பொருட்கள்:** உரித்த பூண்டிதழ் 6 பல் - பசும்பால் 100 மில்லி, தண்ணீர் - 100 மில்லி, பனைவெல்லம் - 5 கிராம்.

செய்முறை: பசும்பால் தண்ணீர் இரண்டையும் ஒன்றாக கலந்து லேசான கொதி வரும் வரை காய்ச்சி கொள்ள வேண்டும்.

அப்படி கொதிக்க வைத்த பாலினை இந்த பூண்டில் கொஞ்சம் விட்டு விழுதாக அரைத்துக் கொள்ள வேண்டும்.

அதன் பின் அரைத்த இந்த விழுதை ஏற்கனவே கொதிக்க வைத்திருக்கும் பாலில் போட்டு நன்றாக மீண்டும் காய்ச்சி கொள்ளவேண்டும்.

இந்தப் பால் பாதியாக சுண்டியதும் ஆற வைத்து பனைவெல்லம் சேர்த்து பருகலாம்.

இதுதான் சித்தர்கள் நமக்கு அருளிய பூண்டுப்பால் செய்யும் முறையாகும்.

**இந்த பூண்டு பாலின் பயன்கள்:**

❖ உடலில் உள்ள அனைத்து வாய்வுகளும் நீங்கிவிடும்.

❖ செரிமானக் கோளாறுகள் நீங்கும். இதனால் சர்க்கரை நோய் குறையும்.

❖ உடலில் சூடு குறையும். இதனால் பித்தம் சமநிலைப்படும்.

❖ உயர் ரத்த அழுத்தத்திற்கு ஒரு அற்புதமான மருந்து இது அனுபவ உண்மை.

❖ தொண்டை சளி நீங்கும் உடலிலுள்ள சீதளம் குணமாகும். சிலேத்தும குணம் சமநிலைப்படும்.

❖ வாதநோய்கள் நீங்கும் இதனால் மூட்டுவலி குணமாகும் என்று சித்தர்களே கூறியிருக்கின்றார்கள்.

❖ இந்தப் பூண்டுப் பாலினை பருகுவதால் வாதம் பித்தம் சிலேத்தும் எனும் முக்குணங்கள் சமமாகும் என சித்தர்களே கூறி இருப்பதால் உடலில் எந்த நோய்களும் அண்டாது இதனால் வேறு நோய்களும் உடலில் தோன்றாது என்பது உறுதி

# மற்றவர்களோடு ஒப்பிடாதீர்கள்!

உளவியல் படிப்பில் சேர்ந்தபோது எங்களுக்குக் கற்றுக்கொடுக்கப்பட்ட பாலபாடம் ஒன்று உண்டு.

தனிநபர் வேறுபாடுகளைக் கற்பது உளவியலில் அடிப்படை நோக்கங்களில் ஒன்று என்று. இதை Individual Differences என்பார்கள்.

ஒருவரைப் போல மற்றொருவர் இல்லை என்பதுதான் இந்தக் கூற்று.

இரட்டைப் பிறவிகள்கூட இதற்கு விதிவிலக்கல்ல. இதைத் தெரிந்தகொள்ள உளவியல் படிக்க வேண்டியதில்லை. “அஞ்சு விரலும் ஒரே மாதிரியாவா இருக்கு?” என்பது நம் சொல் வழக்கில் உள்ளதே!

ஆனால், மனம் சலனப்படுகையில் முதலில் மறந்துவிடும் விஷயமும் இதுதான். எல்லாவற்றையும் சமன்படுத்தித் தட்டையாகப் பார்ப்பது மனத்துக்கு சவுகரியமான காரியம்.

“உன் வயசுதானே அவனுக்கு, அவனால முடியுது உன்னால முடியுதா?” என்று சுலபமாய்க் கேட்க வைக்கும்.

ஒப்பிடுதல் வன்முறை. அது சுய நிராகரிப்புக்குத்தான் வழிவகுக்கும். ஆனால், அதிகாரம் கையில் வந்தவுடன் இந்த ஒப்பிடுதல் அருமையான நிர்வாக ஆயுதமாக மாறிவிடுகிறது.

இது பற்றி ஒரு பள்ளியில் பேசிய போது ஆசிரியர் ஒருவர் சந்தேகம் எழுப்பினார்: “மாணவர்களை ஊக்குவிக்க ஒப்பிடுதல் உதவாதா, பிறரைப் போல நாம் ஆக வேண்டும் என்று தோன்றவைக்காதா?” என்றார்.

“உங்க மாணவர் உங்களிடம் கேட்கிறார்: ‘அவரும் உங்களை மாதிரி எம்.ஃபில்தானே படித்திருக்கிறார்.

அவர் மட்டும் எம்.என்.சி.யில ஒரு லட்ச ரூபாய் சம்பளத்தில் இருக்கும்போது நீங்க மட்டும் ஏன் ஸ்கூல் மாஸ்டராய் இன்னமும் இருபதாயிரம் சம்பளம் வாங்குகிறீர்கள்?’ இதை நீங்கள் ஊக்குவிப்பாய் எடுத்துக்கொள்ள முடியுமா?” என்று கேட்டேன்.

அவர் முகம் கோபத்தில் சிவந்தது. வெகு நேரம் கழித்து அவரே தனியாக வந்து பேசினார். “கூட்டத்தில்

எல்லோர் முன்னிலையிலும் அப்படி நீங்கள் கேட்டது என்னை நிலை குலையச் செய்தது” நான் அமைதியாகச் சொன்னேன். “நீங்களும “நீங்களும் மாணவர்களைக் கூட்டத்தில் வைத்துத்தானே ஒப்பிடுகிறீர்கள்!”. இம்முறை பொருள் விளங்கியவாறு மவுனமாக விலகிச் சென்றார் ஆசிரியர்.

“என் அம்மாபோல எனக்கு மனைவி வேண்டும்”, “சின்ன வயசில எனக்கு நடனம் கத்துக்க வாய்ப்பில்லை. நீயாவது கத்துக்கோ” இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம்.

தோற்றத்தால், அறிவால், குணத்தால், மன அமைப்பால் ஒருவருக்கொருவர் வேறுபட்டுள்ளோம். வாழ்க்கை முறைகளும் வாழ்க்கை அனுபவங்களும் இன்னமும் நம் பன்முகத்தன்மையை விரிவடையச் செய்து விடுகிறது. ஆனால், இந்த வேறுபாடுகளை மறந்து ஒப்பீடு செய்வதும், கட்டுப்படுத்த நினைப்பதும், உறவின் பல ஆதாரச் சிக்கல்களுக்குக் காரணமாகின்றன. எல்லாச் சேதாரங்களுக்குமான விதை ஒரு தவறான எதிர்பார்ப்பு. “நான் வேறு. நீ வேறு. அது உன் கருத்து. இது என் கருத்து. நாம் வேறுபடுதலில் தவறில்லை” என்று சற்று அறிவுபூர்வமாக யோசிக்க ஆரம்பித்தால் பல உணர்வுப் போராட்டங்களில் இருந்து விடுதலை பெற முடியும்.

- **கே.பி.அசோகன்**



# சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நூல் வெளியீட்டு விழா!

சுற்றுசூழல் பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டுள்ள இந்த காலத்தில் ஐம்பது "சுற்றுசூழல் விழிப்புணர்வு" கட்டுரைகள் அடங்கிய நூல், ஒன்றினை தஞ்சாவூர் மாவட்ட சுற்றுசூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் முனைவர் பா. ராம் மனோகர் எழுதி வெளியிட்டுள்ளார். இந்த நூலினை 25.10.24 அன்று, தஞ்சாவூர், வல்லம் பெரியார்மணியம்மை பல்கலைக்கழகம் துணை வேந்தர் டாக்டர்.V.ராமச் சந்திரன் அவர்கள் வெளியிட்டார்! அதனை தஞ்சாவூர் மாவட்ட கல்வி அலுவலர் திரு.எ.மாதவன் அவர்கள் மற்றும் கவின்மிகு தஞ்சை இயக்கம் தலைவர் டாக்டர். ராதிகா மைகேல் பெற்றுக்கொண்டு வாழ்த்துகள் கூறினர். இதே நிகழ்ச்சியில் 100 பள்ளி மாணவர்களுக்கு சுற்று சூழல் செயல் திட்டம் மண் புழு உரம் தயாரிப்பு பயிற்சி சிறப்பாக நடத்தப்பட்டது.















தொடர் 30

## நாடு எங்கே போய்க் கொண்டிருக்கிறது?

# மது விலக்கு ஒரு முக்கிய தேசியக் கொள்கையே!

இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தில் கூறியபடி, மது விலக்கு கொள்கையை ஒரு தேசிய கொள்கையாக நமது ஒன்றிய அரசு ஏற்றுக் கொண்டு, ஒரு தனிச் சட்டம் இயற்றி அதை தீவிரமாக செயல் படுத்த வேண்டும்!

அதை செயல் படுத்த ஒவ்வொரு மாநிலங்களுக்கும் கூடுதல் நிதியும் ஆண்டுதோறும் வழங்க வேண்டும்!

மத்தியில் ஆட்சிக்கு வரும் எந்தக் கட்சியையும் விட இன்று ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் மத்திய அரசுக்குத் தான் மிக அதிகப் பொறுப்பு இருக்கிறது!

மற்ற எல்லாக் கட்சிகளுமே தாங்கள் மதச் சார்பு அற்ற கட்சி என்று மக்கள் மத்தியில் தீவிரமாகச் சொல்லிக் கொண்டிருக்கின்றன!

ஆனால் இன்றைய மத்திய அரசு பெரும்பான்மை இந்து மக்கள் வாழும் இந்தியாவில் அவர்களுக்கு ஆதரவாக தங்கள் கட்சி இருப்பதாகக் காட்டிக் கொள்கிறார்கள்!

அதனால் மது விலக்கு கொள்கையைக் கடைப் பிடிப்பதில் அவர்களுக்கு மேலும் கூடுதலான பொறுப்பு இருக்கிறது!

இந்தியாவில் எந்த மதமும் மது குடிப்பதை ஆதரிக்கவில்லை! எல்லா மதமும் மது அருந்துவதை எதிர்க்கின்றன. இந்தியாவில் பெரும்பான்மையான இந்து மதத்தினருக்கு அடுத்தபடியாக இஸ்லாமியர், அதற்கு அடுத்து கிருஸ்தவர்கள் தான் பெரும் பான்மையாக வாழ்கின்றனர்.

எந்த மதத்தினர் அதிகம் குடிக்கிறார் என்று பார்த்தால், இஸ்லாமியர்கள் 90% பேர்கள் குடிப்பது இல்லை! கிருஸ்தவர்களிலும் அதிக சதவிகிதத்தினர்கள் குடிப்பது இல்லை!

நாம் எந்த மதுக் கடைக்குப் போய் பார்த்தாலும் 95% பேர் இந்து மதத்தினராகவே இருக்கிறார்கள். அதில் இப்பொழுது பெண்களும் அடக்கம்!

இந்து மதத்திற்கு ஆதரவாக இருக்கும் அரசு, இந்து மதத்தினர் அதிகம் குடிப்பதை பல வகைகளிலும் தடுக்க முயற்சி செய்ய வேண்டும்! மற்ற கட்சியினரை விட இந்து மதத்திற்காகவே செயல் படும் ஒரு கட்சியினரிடம் ஆட்சிப் பொறுப்பு இருக்கும் காலத்தில் அவர்கள் மது விலக்கை ஒரு தேசியக் கொள்கையாக எடுத்துக் கொண்டு, உடனே சட்டம் இயற்றி குடியை ஒழிக்க இந்திய நாடு முழுவதும் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்!

அதே போல் கடந்த பத்தாண்டுகளில் இந்து மத அமைப்புகள் பல பெயர்களில் இந்தியா முழுவதும் நிறைய செயல் படத் தொடங்கி விட்டன.



அவர்களும், தங்கள் அமைப்புகளில் மது அருந்தபவர்களை சேர்க்கக் கூடாது. அதோடு குடியின் தீமை குறித்து அவர்களும் தீவிர பிரச்சாரமும் செய்ய வேண்டும்!

இந்திய மக்கள் அனைவரும் சுபிட்சமாக வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் வர வர நமது நாட்டில் அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை மிக அதிகமாகிக் கொண்டே போகின்றன!

அந்தக் கட்சிகளிலும் சிந்திக்கத் தெரிந்தவர்கள் நிறைய இருக்கிறார்கள்,

நம் நாட்டில் ஏழை எளிய பாட்டாளி மக்கள், நடுத்தர குடும்பங்களில் பொருளாதார சீர் குலைவு ஏற்பட்டு, பற்றாக் குறையால் அந்த ஏழைப் பெண்கள் குழந்தைகளை இடுப்பில் சுமந்து கொண்டு, எங்கு இலவசம் கிடைக்கும் என்று அலையக் காரணம் இந்த டாஸ் மாக் கடைகள் தான் என்பது அவர்களுக்குத் தெரியும்! நம் நாட்டின் சட்டம் ஒழுங்கு சீர் குலைவதற்கு அடிப்படைக் காரணம் இந்த மதுதான் என்பதும் அவர்களுக்குத் தெரியும்!

அவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து மது விலக்கை ஒரு தேசிய கொள்கையாக மத்திய அரசு எடுத்துக் கொண்டு இந்தியா முழுவதும் மது விலக்கை அமுல் படுத்த சட்டம் இயற்றப் போராட முன் வர வேண்டும்!

அதை விட்டு விட்டு இந்த அரசியல் கட்சிகள் மற்ற கட்சிகளின் கூட்டணிகளில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு இந்த மது விலக்குக் கொள்கையை இப்பொழுது பயன் படுத்திக் கொண்டிருப்பது பொறுப்புள்ள செயலுமல்ல! நாகரிகமும் அல்ல!

மற்ற மாநில மக்களை விட தமிழ் மக்கள் அரசியல் தெளிவுள்ளவர்கள்! அதை புரிந்து செயல்படுவது எல்லோருக்கும் நல்லது!



துடுப்பதி ரகுநாதன்

# எம் பதில்கள்

**தீபாவளி கொண்டாட்டம் முடிந்ததா?**

*– ராஜபத்மாபுரம் சுரேஷ்*

பணம் மட்டுமே பிரதானம் என்று ஆகிவிட்டது. கலாச்சாரம் பண்பாடு பண்டிகை என்ற காலம் மாறிவிட்டது. வேலை நெருக்கடி காரணமாக தங்களுக்கு ஓய்வு வேண்டும் என்று எண்ணுபவர்கள் அதிகமாகி விட்டார்கள். அந்த அடிப்படையில் பொங்கலுக்கு எடுத்துக் கொள்வதைப் போல தீபாவளிக்கு தொடர்ந்து நான்கு நாட்கள் கிடைத்தது எண்ணி மகிழ்ச்சி அடைந்தவர்களே அதிகம். இந்த சமூகத்தில் எப்படி வாழ்வது என்பதை தெரிந்து கொண்டாலே மகிழ்ச்சிதான். நம் தவறை நம் குடும்பத்தார் அம்மா, அப்பா, சகோதரன், சகோதரி, கணவன், மனைவி, பிள்ளைகள், நண்பர்கள் சொன்னால் ஏற்று கொண்டு திருத்திக் கொண்டால் நமக்குத் தான் நன்மை!

தவறு தவறாக ஆகாத வரை தவறு தவறு இல்லை. சொல்லிக் கேட்காமல் தவறு தவறாக ஆகும் பொழுது தவறு செய்பவர் திருத்த வாய்ப்பே இல்லை.

முக்கியமற்று போன இடங்களில் முக்கியமானவையும் சாதாரணம் தான்.

மௌனமாக இருப்பது மிகவும் நல்லது. அது ஒரு விரதம் தான். ஆனால் வாயை மட்டும் மூடிக் கொண்டு மனம் அலைபாய்ந்து கொண்டிருக்குமானால் அது மௌனமாகாது. அதானால் எந்தப் பயனும் இல்லை.

ஆலோசனை என்பது அனுபவப் பகிர்வு. அறிவுரை என்பது நாம் செய்யாததை அடுத்தவர்க்குக் கூறுவது. ஒரு நிஜத்தை சந்திக்க பல நிழல்களைக் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது.

பேசுவது தவறல்ல தேவையற்றதைப் பேசுவது மிகவும் தவறு. ஆசைப்படுவது தவறல்ல. பேராசை கொள்வது பெரும் தவறு. கோபம் கொள்வது தவறல்ல நியாயமற்ற கோபம் மாபெரும் தவறு. தவறிச் செய்வது தவறு. தவறு எனத் தெரிந்த பின் திருந்திக் கொள்ளாதது மாபெரும் தவறு.

நாம் செய்யும் தவறை நம்மை சார்ந்தோர் சொல்வதை கேட்காமல் அவர்களையே (நீங்கள் யார் என்னை கேட்க) என்பது மிக பெரிய தவறு.

நம் தவறை நம் குடும்பத்தார் அம்மா அப்பா சகோதரன் சகோதரி கணவன் மனைவி பிள்ளைகள் நண்பர்கள் மட்டும் சொன்னால் கண்டிப்பாக ஏற்று கொண்டு திருத்திக் கொண்டால் நமக்குத் தான் நன்மை.

**இஞ்சி தின்ற குரங்கு என்று சிலரை திட்டுகிறார்களே?**

*– முத்துவேல் லட்சுமி, கோவில்பட்டி*

பழமொழி என்பது சாதாரண மக்களின் உயரிய கவிதை மொழி. எல்லா பழமொழிக்கு பின்னாடி ஒரு அர்த்தம் இருக்கும் அப்படித்தான் "இஞ்சி தின்ற குரங்கு போல" என்பதும் பழமொழி தான்.

இஞ்சியைப் போன்ற தோற்றமுள்ள காட்டு மஞ்சள் கிழங்கின் மீது, குரங்குக்கு மிகுந்த விருப்பம். இது, மாங்காய் இஞ்சியைப் போன்றது.காரமில்லாதது சற்று இனிப்பும் அதில் இருக்கும். அதை ருசி கண்ட குரங்கு, அதுபோலவே தோன்றும் சாதாரண இஞ்சியைக் கண்டு ஏமாந்து, கடித்துச் சுவைத்து விடும்.அப்போது ஏற்படும் அதன் முகபாவத்தையும், கோபத்தையும் குறிப்பது தான் இந்தப் பழமொழி."



## உயர்நீதிமன்ற கண்டனத்திற்கு ஆளாகி இருக்கிறாரே நித்யானந்தா?

*– ஆர்.டெல்லி குமார் , செங்கல்பட்டு*

நித்யானந்தா தலைமறைவாக இருந்துக் கொண்டு நீதித் துறைக்கு சவால் விடுகிறார் என சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிமன்ற நீதிபதி கண்டனம் தெரிவித்துள்ளார். நித்யானந்தாவின் பெண் சீடரான கர்நாடகாவைச் சேர்ந்த சுரேகா, நித்தியானந்தாவுக்கு சட்ட ஆலோசகராகவும் உள்ளார்.இந்நிலையில், இவர் மீது கணேஷ் என்பவர் வழக்கு தொடர்ந்துள்ளார். அந்த வழக்கு என்னவென்றால் , " தேனி அருகே உள்ள நிலத்தில் ஆக்கிரமிப்புகளில் ஈடுபடுவதாக கூறி நித்யானந்தா சீடர் சுரேகா உள்ளிட்ட 3 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

இந்த வழக்கில், தனக்கு முன் ஜாமீன் வழங்க வேண்டும் என சுரேகா உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மனுத் தாக்கல் செய்தார். இதுதொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது , நித்யானந்தாவின் சீடர்கள் நிலத்தை ஆக்கிரமிக்கும் குற்றச்சாட்டுகளில் ஈடுபடுவதாக குற்றச்சாட்டு வைக்கப்பட்டது. அப்போது, சுரேகாவுக்கு முன் ஜாமீன் தர வேண்டும் என நித்யானந்தாவின் ஆதரவு வழக்கறிஞர் தெரிவித்தார்.

"பிரமாண பத்திரம் தாக்கல் செய்யுங்கள்" அப்போதுதான் நீதிபதி, கோபமடைந்தார் " நித்தியானந்தாவுக்கு எதிராக பல்வேறு வழக்குகளில் பிடிவாரண்ட் உள்ளது ஆனால் நீதிமன்றத்திற்கு வருவதில்லை. நித்தியானந்தா தலைமறைவாக இருந்துகொண்டு நீதித்துறை அமைப்புக்கே சவால் விடுகிறார் என நீதிபதி கண்டனம் தெரிவித்துள்ளார். முதலில் நித்தியானந்தாவை நீதிமன்றத்தில் ஆஜராக சொல்லுங்கள்.

நித்தியானந்தாவின் சொத்துக்களை, இந்திய நீதிமன்றம் பாதுகாக்க வேண்டுமா எனவும் தெரிவித்தார். இதையடுத்து, சுரேகா தரப்பில் எதிர்தரப்பினருக்கு தொந்தரவு ஏதும் கொடுக்க மாட்டேன் என்றும், இட ஆக்கிரமிப்புகளில் ஈடுபட மாட்டேன் என்றும் பிரமாண பத்திரம் தாக்கல் செய்தால் முன்ஜாமீன் குறித்து பரிசிலிப்பதாகவும் உயர்நீதிமன்ற மதுரை கிளை தெரிவித்தது.





## நீதிமன்றங்களில் உள்ள தராசு வைத் திருக்கும்தேவதைசிலைமாற்றப்பட்டுள்ளதே!

*– செந்தில், சீர்காழி*

நிறைய திரைப்படங்களில் நாம் பார்த்திருப்போம். நீதிபதி அருகாமையில் கண்களை மூடிய நிலையில் ஒரு பெண் தேவதை சிலை இருக்கும். நீதி தேவதையின் கண்கள் மூடப்பட்டதற்கான காரணம், சட்டத்தின் முன் அனைவரும் சமம், நீதி என்பது பணம், அரசியலுக்கு அப்பாற்பட்டது, இது எதுவும் நீதியை பாதிக்கக் கூடாது என்பதாகும்.

மேலும், நீதி தேவதையின் இடது கையில் உள்ள வாள், வரலாற்று ரீதியில் அநீதியை தண்டிக்கவும், அதிகாரத்தை நிலை நாட்டுவதையும் குறிக்கிறது. அந்த சிலை மாற்றப்பட்டு புதிய வடிவில் வைக்கப்பட்டு இருக்கிறது. புதிய சிலையில் செய்யப்பட்ட மாற்றங்கள். புதிதாக திறக்கப்பட்டுள்ள நீதி தேவதை சிலையின் இடது கையில் வாளுக்கு பதிலாக அரசியல் சாசன புத்தகம் இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும், நீதி தேவதை கண்ணில் கட்டப்பட்டிருந்த கருப்புத் துணியும் அகற்றப்பட்டு, கண்கள் திறந்திருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. நீதியை வழங்குவதற்கு வாள் தேவையில்லை, அரசியலமைப்பு சாசனம்தான் தேவை என்பதை புதிய நீதி தேவதை சிலை குறிக்கும் வகையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், பழைய சிலையின் வலது கையில் இடம்பெற்றிருந்த தராசு, புதிய சிலையிலும் இடம்பெற்றுள்ளது. தீர்ப்பு வழங்குவதற்கு முன்னதாக இரு தரப்பு வாதங்களையும் கவனமாக பரிசீலனை செய்து சமூக சமநிலையை நிலைநாட்டுவதை திராசு குறிக்கிறது. மேலும், புதிய நீதி தேவதை சிலையின் நெற்றியில் திலகத்துடன் இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## ஒரே நேரத்தில்

# வழக்கறிஞராகவும், பத்திரிகையாளராகவும் செயல்பட்டவர் மீது நடவடிக்கை

## உச்ச நீதிமன்றம் பரிந்துரை

உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் ஒருவர் பத்திரிகையாளராகவும் வேலைபார்த்து வந்த விஷயம் தெரியவந்ததையடுத்து, ஒரே நேரத்தில் வழக்கறிஞராகவும், பத்திரிகையாளராகவும் செயல்பட அனுமதிக்க முடியாது என உச்ச நீதிமன்றம் கடிந்து கொண்டிருக்கிறது.

முன்னதாக, மல்யுத்த வீராங்கனைகளின் பாலியல் குற்றச்சாட்டுகளுக்குள்ளான முன்னாள் பா.ஜ.க. எம்.பி பிரிஜ் பூஷன் சரண் சிங்குக்கு எதிராக வழக்கறிஞர் முகமது கம்ரான் மனு ஒன்றை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவானது, உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அபய் எஸ். ஓகா, ஏ.ஜி. மசிஹ் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. விசாரணையின்போது, முகமது கம்ரான் ஒரே நேரத்தில் வழக்கறிஞராகவும், பத்திரிகையாளராகவும் செயல்படுவதை நீதிமன்ற அமர்வு கண்டறிந்தது. அதையடுத்து முகமது கம்ரானைக் கடிந்துகொண்ட நீதிமன்ற அமர்வு,

ஒன்று அவர் வழக்கறிஞராக இருக்க வேண்டும். இல்லையென்றால் பத்திரிகையாளராக இருக்க வேண்டும். ஆனால், ஒரே நேரத்தில் வழக்கறிஞராகவும், பத்திரிகையாளராகவும் இரண்டு வேலைபார்ப்பதை நாங்கள் அனுமதிக்க முடியாது. வழக்கறிஞர் தொழில் ஒரு உன்னதமான தொழில். அவர் தன்னை பத்திரிகையாளர் என்று கூறிக்கொள்ள முடியாது" என்று கூறியது.

அதைத்தொடர்ந்து, இந்த விவகாரம் தொடர்பாகப் பார் கவுன்சிலுக்கு உச்ச நீதிமன்றம், வழக்கறிஞராக இருந்து கொண்டே பத்திரிகையாளராகவும் பணியாற்றியதற்காக முகமது கம்ரான் மீது உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டது

# நல்லவர் நட்பு நாள்தோறும் வளரும்!

*நகைவகைய ராகிய நட்பின் பகைவரால்*
*பத்தடுத்த கோடி உறும்.*

விளக்கம்: உள்ளத்தில் அன்பு இல்லாமல் சிரித்துப் பழகும் தன்மை உடையவரின் போலியான நட்பை விட, பகைவரால் வரும் துன்பங்கள் பத்துக்கோடி பங்கு நன்மை பயக்கும். தமக்கு ஏதாவது பயன் உள்ளபோது மட்டும் அன்பொழுகப் பழகி , பயன் இல்லாதபோது நீங்கிச் செல்லும் இயல்புடையவர்களின் தீய நட்பைப் பெற்றால் வரும் நன்மையும் இல்லை.இழந்தால் வரும் கெடுதியும் இல்லை. இத்தகு உள்ளன்பு இல்லாத நட்பு பகைமையை விட அதிகம் தீங்கு விளைவிப்பதாகும்.

இக்குறளுக்கு ஏற்புடைய சில இலக்கியப் பதிவுகள்:

1. சேரிடமறிந்து சேர்
2 .இணக்கமறிந் திணங்கு
3. பாம்பொடு பழகேல்
4. மூர்க்கரோ டிணங்கேல்

ஆத்திசூடி ஔவையார்.

1. சேரத் தக்க நல்லவர்களை ஆராய்ந்து நட்பு செய்.
2. நட்பு செய்தற்குரிய நற்செய்கைகள் உடையவரோடு நட்பு செய்.
3. பால் தருகிறவருக்கும் நஞ்சுதனைக் கொடுக்கின்ற பாம்பினைப் போன்றவர்களோடு பழகாதே.
4. மூர்க்கத்தன்மை உடையவர்களோடு நட்பு செய்யாதே.

நல்லிணக்க மல்ல தல்லற் படுத்தும்.
கொன்றை வேந்தன் ஔவையார்,

*கொள்ளத் தகாத தீய நட்பு துன்பத்தையே கொடுக்கும்.*
*நல்லிணக்கம் இல்லாரோ டிணங்க வேண்டாம்.*
*சேராத இடந்தனிலே சேர வேண்டாம்*
*துர்ச்சனராய்த் திரிவாரோ டிணங்க வேண்டாம்.*

– உலகநீதி உலகநாதர்.

கொள்ளத் தகாத தீயோர் நட்பின் தீமைகளைப் பற்றித்தான் உலகநீதியும் உணர்த்துகின்றது.

*நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை*
*நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள் ளாதே.*

– நறுந்தொகை அதிவீரராம பாண்டியர்.

எவ்வளவு காலங்கள்தான் பழகினாலும் கீழ் மக்களின் தொடர்பு நீர்க்குள் பாசிபோல் நிலைத்து நிற்காது.

*நல்லார் செயுங்கேண்மை நாடோறும் நன்றாகும்*
*அல்லார் செயுங்கேண்மை யாகாதே*

– நன்னெறி சிவப்பிரகாசர்.



நல்லவர்களின் நட்பு நாள்தோறும் நன்றாக வளரும். தீயோர் செய்யும் நட்பு ஒரு நன்மையும் பயக்காது தேய்ந்து அழியும்.

*ஊழா யினாரைக் களைந்திட்டு உதவாத*
*கீழாயி னாரைப் பெருக்குதல் யாம்போலும்*
*தீஞ்சொல் மழலையாய்! தேனார் பலாக் குறைத்துக்*
*காஞ்சிரை நட்டு விடல்.*

– பழமொழி நானூறு முன்றுறையரையனார்

யாழினின்று எழும் இன்னிசை போன்ற மழலைச்சொற்களை உடையவளே! முறைப்பட தமக்கு உறவாய் அமைந்தவர்களின் தொடர்பைக் கைவிட்டு விட்டு, ஒன்றுக்கும் உதவாத கீழ் மக்களின் நட்பைப் பெருக்கிக் கொள்ளுதல் கேடு தருவதாகும். இனிமை நிரம்பிய பலாவினை வெட்டி விட்டு, எட்டி மரத்தை நட்டு வைத்து வளர்ப்பது போன்றதாகும். தீயோர் நட்பினால் ஒரு பயனும் இல்லை.

*தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற*
*தீயார்சொற் கேட்பதுவுந் தீதே தீயார்*
*குணங்க ளுரைப்பதுவுந் தீதே அவரோடு*
*இணங்கி யிருப்பதுவுந் தீது .*

– மூதுரை ஔவையார்,

தீயவர்களைக் காண்பதும், அவர்களுடைய பயனற்ற சொற்களைக் கேட்பதும், அவர்களுடைய தீய குணங்களைப் பற்றிப் பேசுவதும், அவரோடு கூடியிருத்தலும் தீமையே பயக்கும். அதனால் தீயறிவும், தீயொழுக்கமுமே ஏற்படும்.

பயன் கருதிப் பழகுவாரிடத்தில் உள்ளன்பு ஒரு சிறிதும் இருக்காது. உதட்டில் தேனொழுகப் பேசி பயனுள்ள காலத்து நட்பு கொண்டு, பயன்

முடிந்ததும் கைவிடுவாரின் நட்பினைக் கொள்வதால் ஒரு பயனும் இல்லை. அத்தகையோர் தீய நட்பைக் கொள்வதை விட, இழத்தலே சாலச் சிறந்தது.

*தீ நட்பு.*
*பக்கத்தில் இருக்கின்ற பகையாளி*
*பதமாய்ப் பிளந்திடும் கோடாலி*
*ஒப்புக்கு உறவாடி மகிழ்ந்திடுவார்*
*உதட்டில் புன்னகை புரிந்திடுவார்*
*உள்ளத்தில் வன்மந்தனை மறைத்து*
*உண்மைப் போலவே பழகிடுவார்!*
*அன்பு உள்ளத்தில் சிறிதுமின்றி*
*பயன்கருதிப் பழகுவார் தீநட்பை*
*தூக்கத்தில் வந்த கனவெனவே*
*தூக்கி எறிதல் நலம்பயக்கும்!*

**– சு.அமுதமணி கல்யாணசுந்தரம்.**

# ஊருக்குள் உறவாக வலம் வந்த தபால்காரர்!

170 ஆண்டுகளாக இந்திய தபால் துறை இயங்கி வருகிறது. பத்து பைசா கார்டு வாங்கி அதில் சிறிய சிறிய எழுத்துக்களால் நிறைய செய்திகளை சொல்லி அண்ணாவின் அனுப்பப்பட்டது தான் போஸ்ட் கார்டு. அதை எடுத்து வரும் மனிதரை தபால்காரர் என்று அழைப்பார்கள். அன்னாளில் தபாலுக்காக தங்கள் வீட்டு உறவினராகவே பார்த்து வந்தார்கள்.

ஏரியாவுக்குள் வரும்வரைதான் போஸ்ட்மேனால் சைக்கிளில் அமர்ந்து பெடல் பண்ணி வரமுடியும். அப்புறம் ஒவ்வொரு வீடாய் தள்ளிக் கொன்டுதான் வரவேண்டும். ....

மூன்று வீடு தள்ளி அவர் வருவது கண்ணில் பட்டுவிட்டால் போதும்.. காய்ந்து கொண்டிருக்கும் துணியை இழுத்து விட்டபடி, காயப்போட்ட மளிகைசாமானை கிளறி விட்டபடி என்று வாசலில் வந்து நின்று விடுவார்கள். ஈஸிச்சேர் தாத்தாவும் படிக்கட்டில் நின்றிருப்பார். தபால்காரரிடமிருந்து கடிதங்களை யார் வாங்குவது என்பதிலேயே போட்டி நிலவும்.

"பார்த்து.. பார்த்து.. கிழிஞ் சிடப்போறது...

உறவுகளிடமிருந்தும் நண்பர்களிடமிருந்து வரும் கடிதங்களுக்கு அப்படி ஒரு எதிர்பார்ப்பு வரவேற்பு இருந்தது அப்போது.



ஒன்றுக்கும் மேற்பட்ட கடிதங்கள் வந்து விட்டால் மகிழ்ச்சி வெள்ளம்தான், திருவிழாதான்.

நீ இதைப் படி, நான் அதைப் படிக்கிறேன் என்று பிரித்துக் கொள்வதில் போட்டி. ஆனால் கடைசியில் ஒவ்வொன்றாகப் பிரித்து ஒருவர் வாசிக்க, நடுநடுவே உச் கொட்டிக்கொண்டும் சபாஷ், அச்சச்சோ என்று உணர்ச்சிகளைக் காட்டிக்கொண்டும் மற்றவர்கள் கேட்பது சுகம்.

மாலை அலுவலகத்திலிருந்து கணவர் வந்தததும் கைகால் கழுவிக்கொண்டும் வர, வந்து அமர்ந்ததும் அவரும் ஆவலுடன் கடிதங்களை ஒவ்வொன்றாக எடுத்துக் படிப்பார். மறுபடி கடிதம் படிக்கும் படலம்.

எத்தனை நூறு வீடுகள் இருந்தாலும் அவர்கள் பெயர், சுய விவரங்கள், அவர்கள் தேவை போஸ்ட்மேனுக்கு அத்துபடி.

நிறைய வீடுகளில் சந்தோஷங்களையும், சில வீடுகளில் துக்க, வருத்தங்களையும் விநியோகிப்பவர். ஊரில் எல்லோருக்கும் உறவானவர்.

"என்னம்மா.. பையனுக்கு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் அடிச்சுட்டாங்க போல..."

பொண்ணுக்கு ஜாதகம் வந்ததே பொருந்திடுச்சா?

பையன் வீட்டுக்காரர்கள் என்ன பதில் போட்ருங்காங்க?

"மருமகளுக்கு குழந்தை பொறந்துடுச்சாமா?"

"சார் எப்போ வர்றாராம்? இந்த வாரமாவது லீவு கிடைச்சுதாமா?"

"உங்களுக்கு இன்னிக்கி ஒண்ணும் லெட்டர் வரலை பெரியம்மா..." சங்கடத்துடன்தான் ஒலிக்கும் அவர் குரல். பெரியம்மா முகத்தில் குவியும் ஏமாற்றம் காணப் பிடிக்காமல் தலைகுனிந்து அடுத்த வீட்டுக்கு நகர்வார்.

சுப செய்திகள் என்றால் முதல் ஸ்வீட் (ஒரு ஸ்பூன் சர்க்கரை) அவருக்கு தான்.

எங்கள் வீட்டில் ரெகுலராக மோரோ, காபியோ அவருக்காகக் காத்துக் கொண்டிருக்கும். சில விசேஷ நாட்களில் சாப்பாடு, பட்சணங்களும் உண்டு. பொங்கலுக்கு அவருக்கும் புது வேஷ்டி துண்டு உண்டு.

பெரும்பாலான வீடுகளில் வெகு தூரத்தில்(பட்டணம்) வேலை பார்க்கும் தங்கள் பிள்ளை அனுப்பும் மணியார்டர் பணத்தை வாங்கும் போது மகனையே தொடும் உணர்வில் கண் கலங்கும் பெற்றோர்கள். அதற்கு தனியாக போஸ்ட்மேனுக்கு டிப்ஸும் உண்டு.

நிறைய வீடுகளில் பதில் எழுதும் லெட்டர்களும் அவரிடமே கொடுக்கப்படும். மே மாதங்களில் பள்ளிப்பிள்ளைகளுக்கு அவர் பெரிய பூச்சாண்டி! ரிசல்ட் கார்ட் கொண்டுவரும் பூதம்! பொங்கல் சீசனில் கிலோ கணக்கில் பொங்கல் வாழ்த்துக்களை சுமந்து விநியோகிப்பதற்கு அவர் படும் பாடு அப்பப்பா.

ஆனந்த அனுபவங்களை அள்ளித் தந்த சொந்தமாய் நட்பாய், பாலமாய், இன்னும் பலவாய் அருமையான ஓர் துணையாய் அஞ்சல் துறை. எளிமையான இனிமையான வசந்தங்களை இன்று நாம் இழந்திருக்கிறோம். இழந்தால் தானே அருமை தெரிகிறது.

– உமாஸ்கந்தவேள்

# தமிழில் எண்ணுக! எழுதுக! பேசுக!

தமிழறி ஆயுத எழுத்தா? ஆய்த எழுத்தா?

"ஓயுதல் செய்யோம்" எனப் பாடுவான் பாரதி.

ஆய்ந்து ..... கூர்மை ஆராய்ந்து, சரிபார்த்து ஈட்டி, வாள், வேல் தேர்வர்.

எனவே ஆய்ந்து தேர்ந்தது ஆய்தம்.

பேச்சு வழக்கில் ஆயுதம் என்றாகிச் சொல் வழக்கும் / செல்வாக்கும் பெற்றது.

ஆயுத பூசை (ஆய்த பூசை)

பூசை= பூ+செய்.

கேடயம் என்னும் ஆயுதத்தில் உள்ள மூன்று ஆணிகள் போல் உள்ள எழுத்து ஆயுத எழுத்து.

கூர்மை ஆய்ந்து தேர்ந்த கருவி ஆய்தம்

(ஆயுதம்)இளையராசாவும் விசுவநாதனும் நாட்டுப்புறப் பாடல் + இசை வழி நல்ல தமிழ்ப்பாடல்களைத்



திரையில் ஒலியில் பரவச் செய்தனர். எழுத்தில் பேச்சில் இடம்பெற்றுள்ள தமிங்கிலம் திரைப்பாடல்களில் வானொலி தொலைக்காட்சி, இதழ்களில் மிகுந்து காணப்படுகிறது!

தமிழில் எண்ணுக எழுதுக பேசுக பிற மொழியாளர்க்குத் தேவைக்குப் பிற மொழி!

*- தமிழறிஞர் பா. இறையரசன்*

# திட்டமிட்டால் வெற்றி பெறலாம்!

ஓய்வின்றி உழைப்பதால் மட்டுமே ஒருவர் வாழ்வில் முன்னேறிவிடுவதில்லை. அந்த உழைப்பின் பயன் வெளிப்பட ஓர் அரண் வேண்டும். 'திட்டமிடல்' என்பதுதான் அந்த அரண்!

'வாழ்வில் வெற்றி பெற்றவர்களைப் பாருங்கள்! அவர்கள் ஓய்வின்றி உழைத்தவர்களாகவே இருப்பார்கள்'.

இப்படி ஒரு கருத்தை நாம் எல்லோருமே கேட்டிருக்கிறோம்இ இதில் ஏதேனும் மாற்றுக் கருத்து இருக்க வாய்ப்புள்ளதா? இல்லை: 'உழைப்பவர்களே உயர்ந்தவர்கள்' என்ற கருத்தில்' என்ன வேறுபாடு சொல்லமுடியும்? ஆனால்இ இந்தச் சொற்களுக்கு இடையே உள்ள இடைவெளியில் சொல்லில் வராத செய்தி ஒன்று புதைந்திருக்கிறது! என்னவென்று ஊகிக்க முடிகிறதா உங்களால்?

செக்கு மாட்டிற்கும் வண்டி மாட்டிற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமையைக் கேட்டால் எதைச் சொல்வீர்கள்? இரண்டு மாடுகளும் நடந்து கொண்டே இருக்கின்றன; இது ஒற்றுமை. என்ன நடந்தாலும் செக்கு மாடு இருக்கும் இடத்தை விட்டு ஓர் அடிகூட முன்னேறுவதில்லை: ஆனால் வண்டிமாடு கிளம்பின இடமும் போய்ச் சேரும் இடமும் வெவ்வேறு. இது வேற்றுமை.

நடந்துகொண்டே இருப்பதாலேயே முன்னேறிக் கொண்டு இருக்கிறோம் என்பது பொருளில்லை. உடற்பயிற்சிக் கூடங்களிலும், உடல் தகுதி காணும் சில மருத்துவமனைகளிலும், ஒரு நடைக்கருவி வைத்திருப்பதை நீங்கள் கண்டிருக்கக்கூடும். சிலர் அதில் நடப்பார்கள். சிலர் வேகமாக மூச்சிரைக்க, வேர்வை வழிய ஓடுவார்கள். ஆனால் ஓர் அங்குலம்கூட முன்னே செல்ல மாட்டார்கள்.

இது உடற்பயிற்சிக்குப் பொருந்தும். வாழ்க்கைக்குப் பொருந்துமா? நடப்பதன் நோக்கமே ஓர் இடம் விட்டு வேறு இடம் போக வேண்டும் என்பதுதானே? 'இங்கிருந்து கிளம்புகிறேன்; இந்த இடத்தை அடைவேன்' என்ற தெளிவுடன் நடப்பவனே குறித்த இடத்தை விரைவில் அடைகிறான். தெருத் தெருவாக நடந்து கொண்டே இருந்தால் பயன் உண்டா? 'பாதையை விட்டு விலகிய கால்கள் ஊர்போய்ச் சேராது' என்றார் கண்ணதாசன்.

இது உழைப்புக்கும் பொருந்தும். ஓய்வின்றி உழைப்பதால் மட்டுமே ஒருவர் வாழ்வில் முன்னேறிவிடுவதில்லை. அந்த உழைப்பின் பயன் வெளிப்பட ஓர் அரண் வேண்டும். 'திட்டமிடல்' என்பதுதான் அந்த அரண்!

உழைப்பின்றி 'இப்படிச் செய்ய வேண்டும்: அப்படிச் செய்யவேண்டும் என்பவர்களை 'வாய்ச்சவடால்' பேர்வழி என்கிறோம். 'ஆண்டிகள் சேர்ந்து மடம் கட்டியதைப்போல' என்ற பழமொழியும் இவர்களைக் குறிக்கிறது. உழைப் பில்லாத திட்டமிடல் வெறும் வீண் பேச்சுதான். ஆனால் திட்டமிடாத உழைப்பு...?

'விழலுக்கு இறைத்த நீர்' என்ற பழமொழி இந்தக் கருத்தையே வலியுறுத்துகிறது. நீர் இறைப்பது என்பது கடினமான உழைப்புதான். ஆனால்இ இறைக்கும் நீர் எங்கே போய்ச் சேர வேண்டுமோ அதை நோக்கிப் பாய வேண்டும். இல்லா விட்டால் நீரை இறைத்துத்தான் என்ன பயன்?

திட்டமிடுதலும், செயல் படுதலும் இணைந்தால்தான் வெற்றியின் வாசல் தென்படுகிறது



# விதை இருளுக்கு அஞ்சாது

செல்வம் சேர்ப்பதில் வெற்றி அடைபவர்கள். அதை அனுபவிப்பதில் தோற்றுப் போகிறார்கள். நல்ல தோழமை.. விண்மீன்கள் போல... எப்போதும் காண முடிவதில்லை.

ஆனால், எப்போதும் அடி மனதில் பதிந்திருக்கும் துன்பங்களுக்குஇடையில்தான் வாய்ப்புகள் ஒளிந்திருக்கின்றன

வாழ்க்கை வேடிக்கையானது, நீங்கள் ஒன்றுமில்லாமல் வருகிறீர்கள், பிறகு நீங்கள் எல்லாவற்றிற்கும் போராடுகிறீர்கள், பிறகு எதுவுமில்லாமல் போகிறீர்கள்.

இந்த பிரபஞ்சத்தில் நீங்கள் இழக்கவும் ஏதுமில்லை. தொலைக்கவும் ஏதுமில்லை. உரிமை கொண்டாடவும் ஏதுமில்லை. உங்கள் உடலும் கூட உங்களுக்குச் சொந்தம் இல்லை.

கவலை இல்லையெனில் மனிதனும் இல்லை. சூழ்நிலைகள் மாறும் போது பலரது வார்த்தைகள் மாறும். சிலரது வாழ்க்கையும் மாறும். ஆகவே எதற்கும் அதிகம் கவலைப்படத் தேவையில்லை. இருக்கும் வரை உங்கள் வாழ்வை சிறப்பாக வாழ்ந்துவிட்டுச் செல்லுங்கள். புதைக்கப் படவில்லை விதைக்கப் படுகிறோம் என்று உணர்ந்த விதை இருளுக்கு அஞ்சாது. ஒதுக்கப் படவில்லை செதுக்கப் படுகிறோம் என்று உணர்ந்த மனம் தோல்விக்கு அஞ்சாது.




உலகில் ஆபத்தான பயணம் எதுவென்றால் நல்லவர்களாக நடிப்பவர்களோடு நம்பிக்கையாக பயணிப்பதுதான்.

எல்லோருடைய இதயங்களும் ஒரே அளவில் தான் இருக்கிறது, ஆனால் எல்லோர் இதயங்களிலும் கருணையும், மனிதநேயமும் தான் ஒரே அளவில் இருப்பதில்லை, கருணையுடன் வாழ்வோம்.

பற்று வைப்பதை விட பற்ற வைப்பதே உறவுகள் செய்யும் அற்புதமான வேலை.

இவ்வுலக வாழ்க்கை மூன்று நாள்:

1.நேற்று வாழ்ந்தோம்; அது திரும்ப வராது.

2.இன்று வாழ்கிறோம்; அது நிரந்தரம் இல்லை.

3 நாளை எங்கே இருப்போம்; என்று நமக்கும் தெரியாது.


KRM 99 DELIGHTS




















**CONTACT : 9003 454 454**

## FLAT INTERIOR FINISHES

- LED Light Fittings- Panasonic/GM
- 32-inch LEDTV-Sony/Croma
- 1.5-ton Hitachi Inverter AC
- 15-ltr Storage Haier Water Heater
- King Size Cot
- Designer Wardrobe
- StudyTable with Chair
- Duroflex / Nilkammal Spring Mattress
- Jaquar Bathroom Fittings

## SAFETY FEATURES


- CCTV Security Cameras
- Security Guards
- Gate Security24x7
- Fire Safety HooterSystem
- Boom Barriers
- Speed Breakers
- Surveillance Room
- Fire Hydrant System
- Fire Extinguishers

## AMENITIES

- Gym
- Spa
- Beauty Parlor
- Restaurant
- Party Hall Event Booking
- Boating Restaurant
- 99 Kitchen
- International Party Clubs and PUB
- Indoor Games
- Yoga Space
- Lake View
- Boating
- Fishing
- HomeTheaters
- Association Room
- Eco Tourisms
- Multipurpose hall
- Conference Room
- Business Motivation Hall
- Covered Car parking
- Power Backup24x7
- STP 24x7
- Stand by Motors and Pump
- Johnson Lift 15nosCapacity







MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/ 2022-2024
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month
WPP No. TN/PMG(CCR)/WPP-609/2022-2024
POSTED AT EGMORE/RMS. PATRIKA CHANNEL. POSTED ON. 1-7 November 2024



# மித்ரா டைம்ஸ்

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்

MITRA TIMES - Tamil & English Monthly

# மித்ரா டைம்ஸ் புரவலர் ஆக அழைக்கிறோம்!













அன்புடையீர்,

மித்ரா டைம்ஸ் மாத இதழ் தொடர்ந்து 10 ஆண்டுகளாக வெளி வருகிறது. இந்த மாத இதழை படித்துவிட்டு தங்களைப் போன்றவர்கள் பாராட்டியும் குறைகளை சுட்டிக்காட்டியும் எங்கள் பயணத்தை தொடர வழிகாட்டுகிறீர்கள். தங்களை மித்ரா டைம்ஸ் மாத இதழில் சிறப்பான இடத்தில் வைத்து பார்க்க முடிவு செய்துள்ளோம்.

**சிறப்பு நிலை புரவலர்:** தங்கள் சார்பாக உறவினர்கள் நண்பர்கள் வாடிக்கையாளர்கள் என தங்கள் நட்பு வட்டத்தில் உள்ள 200 பேரை சந்தாதாரராக சேர்த்து தாங்கள் சிறப்பு புரவலராக சேர அழைக்கிறோம். தங்கள் பெயர் தவறாமல் மாதம்தோறும் புத்தகத்தில் இடம் பெறும் தங்களுக்கு மூன்று பக்கங்கள் ஒதுக்கப்படும் அந்தப் பக்கத்தில் தாங்கள் விரும்பிய மித்ரா டைம்ஸ் வாசகர்கள் ஏற்கக் கூடிய வகையில் இருக்கின்ற கதை கட்டுரை கவிதை விளம்பரம் ஆகியவற்றை அனுப்பி வைக்கலாம். மித்ரா டைம்ஸ் சார்பில் நடைபெறும் விழாக்களில் தாங்கள் சிறப்பு விருந்தினராக அழைக்கப்படுவீர்கள்.

**முதல் நிலை புரவலர்:** தங்களுக்கு தெரிந்த நண்பர்கள் உறவினர்கள் வாடிக்கையாளர்கள் வட்டத்தில் 100 பேரை சந்தாதாரராக சேர்த்து முதல் நிலை புரவலராக சேர அழைக்கிறோம். தங்கள் பெயர் தொடர்ந்து இதழில் வெளிவரும். தங்களுக்கு இரண்டு பக்கங்கள் ஒதுக்கப்படும் அதில் தாங்கள் விரும்பும் வண்ணம் மித்ரா டைம்ஸ் வாசகர்கள் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கதை கவிதை கட்டுரை விளம்பரம் ஆகியவற்றை அனுப்பி வைக்கலாம். மித்ரா டைம்ஸ் சார்பில் நடைபெறும் விழாக்களுக்கு தங்களுக்கு அழைப்பிதழ் அனுப்பப்படும்.

**கடைநிலை புரவலர்:** தங்கள் நண்பர்கள் உறவினர்கள் வாடிக்கையாளர்கள் வகையில் 50 சந்தாதாரர்களை சேர்த்து மித்ரா டைம்ஸ் மாத இதழில் தங்கள் பெயர் தொடர்ந்து இடம்பெறச் செய்யலாம். தங்களுக்கு ஒரு பக்கம் ஒதுக்கப்படும் அதில் தாங்கள் விரும்பும் வண்ணம் மித்ரா டைம்ஸ் வாசகர்கள் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கதை கவிதை கட்டுரை விளம்பரங்களை அனுப்பி வைக்கலாம்.

ஆசிரியர் திரு. எம். எஸ் .மூர்த்தி அவர்கள் தொடர்ந்து நடத்தி வரும் மித்ரா டைம்ஸ் மாத இதழில் அவரது நட்பு வட்டாரத்தில் இருக்கும் தங்களுக்கு சிறப்பு அந்தஸ்து வழங்க இந்த ஏற்பாடுகளை செய்துள்ளோம் தாங்கள் உடனடியாக இதுகுறித்து அலுவலகத்திற்கு தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

**மேலாளர்**
மித்ரா டைம்ஸ்













**தொடர்புக்கு: 9789837069, 9003107102**

**திரு. அரிபாபு KRM: 9840502238**

Printed, Owned and Published by M.SUNDARAMOORTHY, Printed at SRI PADMALAYA PRINTERS, No.8/18, Manali Salai, Korukupet, Chennai - 600 021. Published at No.602, Suruthi Block, Chitra Avenue, No.9, Choolaimedu High Road, Chennai - 600 094. Editor M.SUNDARAMOORTHY